

# செந்தமிழ்


| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு ககூகூஎ-கார்த். | பகுதி |
| --- | --- | --- |
| கூஉ | 1966—டிசம்பர். | உ |


## பண்பாட்டைக் காட்டும் சொற்கள்

—✻—


—[ கி. பழநியப்பன். ]—


### முன்னுரை.

ஒரு நாட்டு மக்களின் பண்டைய நாகரிகத்தையும், பண்பாட்டையும் அறிந்துகொள்ளப் பல வழிகள் உண்டு. அவற்றுள், புதைபொருள்கள், இலக்கியங்கள், வரலாறுகள் இம்மூன்றும் ஐயத்திற்கிடமின்றி உண்மையை உள்ளவாறு உணர்த்தும் சிறந்த கருவிகள் எனலாம். எனினும், இவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட கால எல்லை வரைதான் மக்களின் பண்பாட்டை, அறிந்துகொள்ளத் துணையாக நிற்கும். வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட மக்களின் பண்பாட்டை, அந்நாட்டில் தோன்றிய இலக்கியங்களும், அவ்விலக்கிய காலத்திற்கு

முற்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகளும் நன்கெடுத்துக்காட்டுவனவாகும். இவையனைத்தையும் அந்நாட்டில் பண்டுதொட்டு வாழ்ந்து வந்த மக்களின் பண்பாட்டை வித்தாகக்கொண்டு வளர்ந்த ஒரு மரத்தின் தோற்றம் எனலாம். இவற்றைத் தவிர ஓர் இனத்தின் ஆதிப்பண்பாட்டை அறிய வேறு வழி இல்லையா என்ற கேள்வி எழுகின்றது. அதற்கும் ஒரு சிறந்த வழி உண்டு! ஆதியில் அம்மக்களால் உருவாக்கப்பெற்ற சொற்களையும், அச்சொற்களின் அமைப்புக்களையும் அவற்றில் நுட்பமாய் அமைந்துள்ள பொருட் செறிவுகளையும் ஆராய்வதன் மூலம், அவ் இனத்தின் ஆதிப்பண்பாட்டை அறிந்துகொள்ளலாம் இம்முறையில் பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டை, அத்தமிழ் மக்கள் அமைத்த சொற்களின் வாயிலாக ஓரளவு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மொழி :-** எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் சொற்களால் வெளியிடுதற்குரிய கருவியே மொழி எனலாம். அதனை, ஒருவர்க்கொருவர், தத்தம் உள்ளக் கருத்துக்களை அளவளாவிக்கொள்ளுதற்கென அமைந்த 'ஒலி' என்றும் கூறலாம்.

உலக மொழிகளில் எதனை ஆராய்ந்தாலும், அது எப்பொழுது தோன்றியது என்றோ, எவரால் தோற்றுவிக்கப் பெற்றது என்றோ, திட்டவட்டமாகக் கூறுதல் இயலாது; ஏனெனில் எந்த ஒரு மொழியும், குறிப்பிட்ட ஒரு மனிதனால் ஆக்கப்பட்டிருக்க முடியாது.

"மொழி அமைப்பு, படிப்படியாக உருவாகி. வளர்ச்சி பெற்றது. ஆனால் அது, தனி மனிதனால் மட்டும் உருவாகியதில்லை" என ஹேவலாக் என்ற அறிஞர் கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது.

**மொழியும் பண்பும் :-** மனிதன், விலங்கிலிருந்து வேறாகி, மனிதனாக வாழத் தொடங்கியது, அவன் பேசும் ஆற்றலைப்பெற்ற பின்னரேயாகும்; மனித உள்ளத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு, எழுந்தனவே சொற்கள் எனலாம்! ஒரு மொழியில் ஆக்கப்பட்ட ஒவ்வொரு சொல்லும், அம்மொழி பேசும் மக்களின் உள்ளக்

கிடக்கையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டும் அரிய கண்ணுடி எனலாம். பண்டைய மக்களின் பண்பின் எதிரொலியே "மொழி" ஆகும்.

"மனித வரலாற்றின் அடிச்சுவட்டை நினைவுபடுத்துவதே மொழியாகும்" என 'சிரித்' என்பவரும், "மனித இனத்தின் எண்ணம், பண்பாடு இவற்றைக் காட்டும் ஒரு கருவியே மொழியாகும்" என்ற ஜான்சனும் கூறுகின்றனர்.

ஒரு சொல் ஆக்கப்பட்ட காலத்தில் இருந்த மனநிலையும் சூழ்நிலையும் மாற்றம் பெறுமாயின், அச்சொல்லின் பொருளும் மாற்றம்பெறும். சான்றாகத் தமிழ் மொழியில் 'சான்றோன்' என்னும் சொல்முற்காலத்தில்போர்க்களத்தில் சிறந்த முறையில் போராடி வெற்றிபெற்ற வீரனைக் குறித்தது. ஆனால் பின்னரோ, 'எல்லாப் பெருங் குணங்களும் நிறைந்த உயரியவன் 'என்ற பொருளைக் குறிக்கலாயிற்று.

சொற்களின் அமைப்பை நோக்கும்போது, தொல்காப்பியனார், இயற்கை மொழிகளை 'ஓரெழுத்தொரு மொழி', 'ஈரெழுத்தொரு மொழி' என்று கூறிச் செயற்கை மொழிகளை 'இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி' (நூ. பா. 45) என்றார். இதனால் ஓரெழுத்தாலேனும் ஈரெழுத்தாலேனும் இயல்பாக அமையும் மொழிகளை 'ஒரு மொழி' என்றமையால், அவை 'இயற்கை மொழி' என்றும், 'தொடர் மொழி' என்றது ஒரு மொழியோடு வேறு மொழி தொடர்ந்தனவே யாதலால் அவை மக்களின் விருப்பப்படிக் கூட்டிப் புணர்க்கும் செயற்கை மொழி என்றும் கொள்ளத்தகும்.

நன்னூலார், பெயர்களை, மரபுபற்றிய பெயர் என்றும், ஆக்கம் பற்றிய பெயர் என்றும் (நூ. பா. 272) இரு கூறுபடுத்திக் கூறுவர். அவற்றுள், மரபுபற்றிய பெயர்களை, ஆக்கத்தின் வேறாகக் கூறினமையின் அம்மரபுப் பெயர்கள், மக்களால் ஆக்கிக் கொள்ளப்பட்டனவல்ல என்பதும், அவை 'இயற்கை மொழி' என அழைக்கப்படும் என்பதும் அறியலாம். இயற்கை ஒலிக் குறிப்புக்களே ஆதி மொழியாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பின்பு அவ்வொலிகளைக் கொண்டு சொற்கள் உருவாக்கப்பெற்றிருக்க வேண்டும். முன்னர்க் கூறியவாறு, ஏதாவது காரணம் பற்றியே அவைகள் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அக்காரணமும், அச்சொற்களை உருவாக்கியோரின் பண்பாட்டோடு அவைகள் தொடர்பு கொண்டனவாகவும் இருக்கும். அதுவே இயற்கையும் ஆகும்!

ஆதி மனிதன் :- ஊழிக் காலத்தில் பூமி முழுவதும் முழுகிக் கிடந்து, நெடுங்காலத்திற்குப் பின் அவ்வெள்ளம் வடியத் தொடங்குங்காலை மிகவும் உயர்ந்து விளங்கிய நிலப்பகுதியே முதலில் வெளிப்படும். அதனால் ஆதியில், முதல் மனித இனம், அப்பகுதியில்தான் தோன்றியிருக்க வேண்டும். இதனையே, புறப்பொருள் வெண்பாமாலை "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே...தோன்றிய மூத்தகுடி" எனக் குறிப்பிடுகின்றது. அங்ஙனம் மூத்தகுடி தோன்றிய இடத்தில்தான், அவர்களது மொழியும் தோன்றியிருக்கவேண்டும். தமிழ்மொழி, மலையகத்தில் பிறந்ததென்பதைப் 'பொருப்பிலே பிறந்த மொழி' என்றும், 'ஓங்கலிடை தோன்றிய மொழி' என்றும் தண்டியாசிரியர் போன்ற பெருமக்கள் கூறுகின்றனர்.

மனிதன், தன் இதழ் முயற்சியால் எளிதாக எழுப்பக்கூடிய ஒலி 'மா' என்பதாகும். மக்களால் வளர்க்கப்படும் விலங்கு ஆகிய பசு, ஆடு போன்றனவும் 'மா' என்ற ஒலியை எழுப்புவதைக் கண்ட ஆதித் தமிழர், மிருகங்கள் அனைத்தையும் 'மா' என்றே கூறியிருக்கலாம். அதுவே, முதன் முதலிற் கண்ட ஓரெழுத்து ஒரு மொழி என்றும் கொள்ளலாம். பண்டைத் தமிழர், தம் கருத்தை வெளிப்படுத்த இன்றியமையாத பல சொற்களை 'மா' என்ற சொல்லின் அடிப்படையில் அன்றையச் சூழ்நிலைக்கு ஏற்ப உருவாக்கியமை, சிந்திக்கத்தக்கது!

'மா' என்ற ஓரெழுத்து ஒரு மொழியைக் கண்டவர்களே, தாம் வாழ்ந்த இடத்தை 'மலை' என்றனர். மேலும் மழை, மரம், மகவு, மகடூஉ, மகன், மகள், மனிதன், மனைவி, மன்னன். மனு, மனை, மதி, மது, மனம் போன்றவைகளும் மாக்கள், மாடு, மாலை, மாறன் போன்றவைகளும் 'மா' என்ற ஒலியை முதலாகக்

கொண்டு உருவாக்கப்பட்டிருப்பன வியக்கத்தக்கதாம். இங்ஙனம் பேச்சு வழக்கிலுள்ள பண்பாட்டைக் காட்டும் சில சொற்களைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

உறவுப் பெயர்கள் :-

அம்மா : தாயுள்ளம் மிகவும் மென்மையானது; ஆதலின் மென்மைக்கேற்ற மெல்லின ஒலியில் அமைந்துள்ளது.

அப்பா : ஈன்ற தாயை நோக்கத் தந்தையின் மனம், வன்மை யுடையது; ஆதலின் அதற்கேற்றவாறு வன்மையான ஒலியில் இச்சொல் அமைந்துள்ளது.

மனைவி : இல்லாள், மனையாள்—இச்சொற்கள், ஒரு குடும்பத்தில் வாழ்க்கைத் துணைவிக்கு உரிய இடத்தைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. மனைக்கு விளக்கமாய்த் திகழ்பவள் மனைவி; இல்லத்திற்கு அரசி இல்லாள்; மனையை ஆள்பவள் மனையாள். எனவே வாழ்க்கைத் துணைவி, வீட்டில் முதன்மையான இடத்தைப் பெறுகிறாள். 'இல்லாள்' என்ற சொல், இல்லத்தை ஆளும் பெண்ணை மட்டுமே குறிக்கும்; ஆனால் 'இல்லான்' என்ற சொல்லோ, இல்லத்தை ஆளும் ஆண் இனத்தைக் குறிக்காமல் 'ஒன்றும் அற்றவன்—வறியவன்' என்ற பொருளைக் குறிக்கும். எனவே, இல்லத்தை ஆளும் முழு உரிமை வாழ்க்கைத் துணைவிக்கே கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

கணவன் : மனைவிக்குக் கண் போன்றவன்; கண் ஒளி மங்கினால் வாழ்வில் துன்பம் ஏற்படும். கண்ணாய் விளங்கும் கணவனின் தன்மையைப் பொறுத்தே மனைவியின் இன்பமும் துன்பமும் அமையும். மேலும் புற உலகத்தையும் நிகழ்ச்சிகளையும் தன் கண்ணாக விளங்கும் கணவன் மூலமாகவே மனைவி அறிய வேண்டும். ஆகவே கணவன் கண்ணைப்போல, மனைவியால் பேணிக் காக்கப்படக்கூடியவன் ஆவான்.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி ஆகிய இவ்விருவர்தம் பண்பாட்டை இச்சொற்கள் நன்கெடுத்துக் காட்டுகின்றன. இதற்குப் பின்வரும் இலக்கிய மேற்கோள்களும் சான்று பகர்கின்றன.

''மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'' (குறள்—51)

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'' (குறள்—55)

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' (குறள்—56)

''மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்
முனைக்கு வரம்பாகிய வெல்வேல் நெடுந்தகை''

''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தன்ளே மடமொழி''
—சிலப்பதிகாரம்

''வினையே ஆடவர்க் குயிரே
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென
நமக்குரைத் தோரும் தாமே'' (குறுந்தொகை)

கொடி :- பெண்ணைக் குறிக்கும் மற்றொரு சொல் 'கொடி' என்பது. ''யாரையோ நீ மடக் கொடி யோய்?''
(சிலப்பதிகாரம், 20, 50)

''பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென''
(மணிமேகலை)

''வஞ்சிக் கொடியே வருகவே''
(மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

கொடி மென்மையானது. தனித்து நிற்கும் ஆற்றல் அற்றது. கொழு கொம்பைப் பற்றி வளரும் இயல்பினது. அதுபோல், கொடிபோன்ற பெண்ணும், கொழுகொம்பாகிய கொழுநனின் துணைகொண்டுதான் வாழ முடியும். கொழுகொம்பு இல்லையேல் கொடி, துவண்டு வாடிவிடும்.

**மருமகன், மருமகள் :-** மணவினையின் காரணமாகத்தான் மகனுக்கு ஒப்பாகக் கருதப்படுபவன் மருமகன்; அங்ஙனமே மணவினை காரணமாகத் தன் மகளுக்கு ஒப்பாகக் கருதப்படு பவள் மருமகள் ஆவாள். திருமணத்தின்போது மணமகனாய் இருப்பவர், அதன்பின் தன் வீட்டுக்கு, மருமகனாய் (மரு=மணம்) விளங்குகிறார். அவ்வாறே மணமகளாய் இருப்பவள், தன் வீட்டுக்கு வரும் மருமகளாய் விளங்குகிறாள்.

**பெயரன் ;-** ஒருவன், தன் மகன் அல்லது மகள் வயிற்றிற் பிறக்கும் ஆடவனுக்குத் தன் பெயரைச் சூட்டும் மரபு இன்றும் தமிழ்நாட்டில் உண்டு. தாத்தாவின் பெயர் சூட்டப்படுவதனா லும், தாத்தாவின் பெயரை அல்லது புகழை விளங்கச் செய்வத னாலும் அவன் 'பெயரன்' என வழங்கப்படுகிறான். இப்பெயரால் அவனது முன்னோர்தம் குடி வழியை அறியலாம்.

**கிளை, கிளைஞர் :-** மரத்தின் ஒரு பகுதியாக, அதனுடன் இணைந்திருப்பது 'கிளை' ஆகும். மரத்தின் பல்வேறு கிளைகளைத் தாங்குவதும், அவற்றிற்கு நீர் முதலாயின அளிப்பதும் வேருடன் இணைந்த அடிப்பாகமாகும். அதுபோல, ஒருவர்க்கு நெருங்கிய உறவினர்கள் 'கிளைஞர்' என்று அழைக்கப்படுவர். இக்கிளைஞர் தம் வாழ்வும் வளர்ச்சியும், அடிமரம்போல் விளங்கும் மூலமகனு டன் இணைந்திருக்கும்.

**சுற்றம் :-** ஒருவனைச் சுற்றிச் சூழ்ந்திருப்பவர் 'சுற்றத்தார்' என அழைக்கப்படுவர். உறவினரல்லாதாரும் 'சுற்றத்தார்' ஆகக் கொள்ளப்படுவர்.

"சுற்றத்தால் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்" (குறள்—524)

**உடல் உறுப்புகள் :** கண்: கண்ணின் பயன் 'கண்ணோட்டம்' கண்ணோட்டம் என்பது, தன்னோடு பழகினவர்களைக் கண்ட விடத்து, அவர் கூறியன மறுக்காமற் செய்யும் தன்மையாகும். கண்ணோட்டத்திற்கு உரிய உறுப்பு 'கண்' எனக் கூறப்பட்டது.

"உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்" (கு. -331)

"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்"! (குறள்—575)

"கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையு மில்" (குறள்—577)

செவி :- செவ்வியன (அழகியசொல்) கேட்கும் உறுப்பு 'செவி' எனப்பட்டது. மறந்தும் தீயசொற்களைக் கேட்கலாகாது என்னும் உயரிய பண்பாடு இதில் அமைந்துள்ளது. இச்செவியாற் கேட்கப்படும் கேள்வி 'செவிச் செல்வம்' எனப் போற்றப் படும்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" (குறள்—411)

"எனைத்தானும் நல்லவை கேட்க" (குறள்—416)

வாய் :- 'வாய்மை'யைக் கூறுவது 'வாய்' எனப்பட்டது. வாயினின்றும் வெளிவரும் சொற்கள் வாய்மையாகவே இருத்தல் வேண்டும். மறந்தும் பிறர்க்கோ, அன்றிப் பிற உயிர்க்கோ தீங்கு தரும் சொற்களைச் சொல்லலாகாது எனும் உயரிய கருத்து இதில் அடங்கியுள்ளது.

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்" (குறள்—291)

"நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது" (குறள்—419)

"இன்சொலா லீர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (குறள்—91)

('வாய்' என வேண்டாது கூறினர், தீய சொற் பயிலா என்பது அறிவித்தற்கு எனப் பரிமேலழகர் உரைக் குறிப்பு அறியத் தக்கது.)

## தொழில்

காவலன் :- அரசனைக் குறிக்கும் சொற்களில் 'காவலன்' என்பதும் ஒன்று. நாட்டையும் மக்களையும் காக்கும் தொழிலை உடையவன், எனவே 'காவலன்' எனப்பட்டான். தன்னுலும் கொடி, ஆ

தன் உறவினராலும், பகைவராலும், கள்வராலும், பிற உயிர் களாலும் நாட்டுக்கு எவ்விதத்தீங்கும் வராமற் காக்கும் கடமை காவலனைச் சார்ந்தது.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்" (குறள்—560)

"மாநிலங்கா வலன் ஆவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ"
(பெரியபுராணம்)

அமைச்சன் :— ஆன்று அமைந்த சொல் வன்மையுடை யவன் 'அமைச்சன்' ஆவான். அரசன் நெறி திறம்பிய வழி, அவனுக்கு அறிவுரை கூறி நல்வழியில் திருத்தும் கடப்பாடு உடையவனே 'அமைச்சன்' எனப்படுவான்.

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு" (குறள்—634)

உழவன் :; உழவு உடையவன் 'உழவன், உழவு என்னும் சொல்லுக்கு வருந்தி உழைத்தல்என்றுபொருள். உழவுத்தொழில் வருந்தி உழைக்குந் தொழில். அதனை உடையவன் உழவன் ஆவான். பாடுபட்டு, உழுது பயிரிடுபவன் உழவன்; வில்லையே ஏராகக்கொண்டு போர்க்களத்தில் போரிடுபவன் 'வில்லேர் உழவன்' எனப்பட்டான். சொல்லையே ஏராக்கொண்டு அவைக் களத்தில் பேசுபவன் 'சொல்லேர் உழவன்' எனப்பட்டான். அறிவாகிய கலப்பையைப் பயன்படுத்தி வாழும் புலவரும் 'உழவர்' ஆவார்.

"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள்—1031)

"வில்லேர் வாழ்க்கைச் சிறார் மதவலி" (புறம்—331)

"புலன் உழுது உண்மார்" (புறம்)

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை" (குறள்—872)

எனவே வருந்தி உழைக்கும் தொழில் 'உழவு' என்பதும் அத் தொழிலையுடையவர் அனைவரும் உழவரே என்பதும் தெரிகின்றது. இதனால் அக்காலத் தமிழர், வருந்தி உழைக்கும் தொழிலுக்கே முதலிடம் தந்தனர் என அறியலாம்.

**ஒற்றன்** :- பிற இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை, எவரும் அறியாதவாறு ஒற்றி, அவற்றை உள்ளன உள்ளவாறே தம் அரசனுக்கு உரைப்பவன் 'ஒற்றன்' ஆவான்.

"ஒற்றினால் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில்" (குறள்—583)

**ஆசிரியர்** :- ஆசுஇரியர் 'ஆசிரியர்' ஆவர். ஆசு—குற்றம், இரியர்—நீக்குபவர். தம்பாற் கல்வி பயிலவரும் மாணவரிடத்துள்ள குற்றங்களை நீக்குபவர் 'ஆசிரியர்' எனப்பட்டனர். அங்ஙனம், மாணவர்தம் மாசுகளை நீக்குங்கால் விரையாமலும்' வெகுளாமலும், விருப்பத்துடன் முகமலர்ந்தும், கேட்பவன் அறிவின் வகையை யறிந்தும் அவனது மனம் ஏற்றுக்கொள்ளும் வகையிலும், நூற்பொருளை உணர்த்த வேண்டும்.

"உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே" (நன்னூல்—26)

**மாணவர்** :- 'மாண்பு உடையவர் 'மாணவர்' எனப்பட்டனர். மாண்பு என்பது, நற்குண, நற்செயலைக் குறிக்கும். எனவே, மாண்புடைய நன் மக்களையே ஆசிரியர் தமக்குரிய மாணவராக ஏற்றனர் என அறியலாம்.

**நண்பன்** :- நட்புக்கு உரியவன் 'நண்பன்' ஆவான். வினை செய்வதற்கு உரியவன் ஆடவன். அவ் ஆடவனுக்குத் துணையாயிருந்து, நட்புப் பூண்டொழுகுபவன் 'நண்பன்' எனப்பட்டான். இச்சொல்லுக்கு ஏற்ற 'பெண்பாற் சொல்' தமிழில் இல்லை. ஏனெனில் ஓர் ஆடவனோடு நட்பு முறையிற் பழகுதற்கு உரியவன் மற்றொரு ஆடவனேயன்றிப் பெண் அல்லள் என்னும் உயரிய

பண்பாட்டை இதிற் காணலாம். 'தோழி' என்னும் சொல் தலைவியுடன் நட்புக்கொண்டு பழகுபவளேயன்றி ஆடவனோடு நட்பு முறையில் பழகுபவள் அல்லள்!

"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு" (குறள்—781)

பிற சொற்கள்:

நாடு:- மக்கள் நாடி வருவதற்கு உரிய இடம் 'நாடு' ஆகும். ஏனைய நாடுகளும் நாடிவருதற்கேற்ற நல் வளப்பங்கள் உடைய நாடே 'நாடு' எனப்பட்டது.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தரு நாடு" (குறள்—739)

செல்வம்:- செல்லும் மதிப்பு உள்ளது செல்வம் ஆகும் அது எங்கும் சென்று வினையை முடிக்கவல்ல ஆற்றல் பெற்றது.

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (குறள்—753)

ஆடைகள்:- அறுக்கப்பட்ட ஆடைக்கு 'அறுவை' என்று பெயர். தறியிலிருந்து அளவாக அறுக்கப்பட்டமையின் 'அறுவை' ஆயிற்று. பூவேலைப்பாடமைந்த வண்ண ஆடை 'பூவார் ஆடை' எனப்பட்டது. சிறுமியர் அணியும் ஆடை 'சிற்றாடை' எனப்பட்டது. முழந்தாள் வரை அணியப்படும் உடை 'வட்டுடை' எனப்பட்டது. உடம்பில் அணிந்துகொள் ளப்படும் சட்டை 'மெய்க்குப்பை' எனப்பட்டது.

அணிகலன்:- குழந்தைகளுக்குப் பாதுகாவலாக அணியப் படும் ஒருவகை அணிகலன் 'ஐம்படைத்தாலி' ஆகும் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்ற ஐந்து படைக்கருவிகள் போற் செய்யப் பெற்ற ஐந்து அணிகலன்கள், ஒன்றாகக் கோக்கப் பட்டுக் கழுத்தில் அணியப்படும் நகை இது! பெண்கள், காதணி, வளையல், சிலம்பு, முடக்கு முதலான பல்வேறு அணிகலன்களை அணிந்துகொள்வர். அவை, நுட்பமான வேலைப்பாடு

கொண்டவை. எனவே. அவ்வணிகலன்களை அணிந்துகொண்ட மகளிர் 'ஆயிழையார்' என்று பாராட்டப் பெற்றனர்.

> "ஈகை யரிய இழையணி மகளிரொடு
> சாயிற் றென்ப வாஅய் கோயில்"
>
> (முடமோசியார் பாடல்)

பெண்கள், காலில் அணியும் அணிக்குச் 'சிலம்பு' என்று பெயர். அச்சிலம்பினுள், முத்து, மாணிக்கம் போன்ற பரல்கள் இருக்கும் ஆதலின் அவர்கள் நடக்கும்போது, இயல்பாக ஓசை உண்டாகும். அவ் ஓசை 'பெண்கள்' வருகின்றனர் என்பதை யறிவிக்கும். அதனைக் கேட்ட ஆடவர்கள் மரியாதையுடன் விலகியோ ஒதுங்கியோ செல்லவேண்டும் என்பதே கருத்து.

**வீடு :-** இல்லத்திற்குரிய பெயர்களில் 'வீடு' என்பதும் ஒன்று. மோட்ச உலகத்தையும் தமிழர் 'வீடு' என்றே குறித்தனர். இவ்வுலக வாழ்வில், இல்லறக் கடமைகளை ஆற்றுதற் பொருட்டு இல்லறத்தானொருவன், வெளியே சென்று பொருள் தேடும் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றான். அயராது வருந்தி உழைக்கும் அவன், இறுதியில், தன் வீட்டை நாடி வருகின்றான். அவ்வீடு அமைதிக்கு உரிய இடமாக, துன்பத்தினின்று விலகி நிற்கும் இடமாக விளங்குகின்றது. அவ்வாறே, பிறவி எடுத்தது முதல், உலகத்தே பல்வகைத் துன்பங்களையும் நுகர்ந்து முடிவில் அமைதி பெறும் மோட்ச உலகமும் 'வீடு' என்னும் பெயர் பெறுவதாயிற்று.

**கடவுள் :-** எல்லாவற்றையும் இயக்கிச் செலுத்த வல்லவர் 'கடவுள்' ஆவார். (கடவுதல்—செலுத்துதல்) எல்லாவற்றையும் கடந்து நிற்பவரும் அவரே!

## இலக்கண அமைப்பு :

**உயர்திணை, அஃறிணை :-** தமிழில் திணை என்பது ஒழுக்கம் குறிக்கும் மரபுச் சொல். உயிராலும், அறிவாலும் அன்றி, ஒழுக்கம் ஒன்றே பற்றிப் பொருளனைத்தையும் உயர்திணை, அஃறிணை எனப் பிரிப்பர் தமிழ்ச் சான்றோர்.

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"

என்பது மூவாயிரமாண்டுகட்கு முந்திய தொல்காப்பியர் கூற்று. எனவே, பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் ஒழுக்கம் ஒன்றையுமே மக்கட் பண்பு எனக்கொண்டனர். ஒழுக்கம் ஒன்றையே தமக்குச் சிறப்புரிமையாகக் கொண்டவர் மக்கள் மட்டுமே. அதனால் அவரைத் தனிவேறு பிரித்துத் தலைமைதந்து நிறுத்தி, மற்றுயிரை அறிவுடையவும் இல்லவுமான எல்லாவற்றையும் வேறு ஒரு வகுப்பினுள் அடக்குவாராயினர் தமிழ் நூலுடையார். 'உயர் திணை என்மனார் மக்கள் தாமே' என்னுமல் 'மக்கட்சுட்டே' என விதந்து சுட்டுவர். எனவே மாந்தர் ஒழுக்கம் உடைமையால் மக்கள் எனவும், அஃது இன்மையால் மாக்கள் (விலங்குகள்) எனவும் சொல்லப்படுவாராயினர்.

இதுமட்டோ? பிறப்பால் மாந்தராய் உருவத்தால் மக்கள் போல்வார் எல்லாரையும் மக்கள் எனக்கொள்ளாமல் விலக்கவும் துணிவர்.

"உறுப்பொத்தல் மக்கள்ஒப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" (குறள்—993)

என்பது பொய்யில் புலவர் பொருளுரை. கேவலம் மதிநுட்பம் மக்கட் பண்பு ஆகாது என்பதையும், ஒழுக்கம் ஒன்றே மக்கட் பண்பாம் என்பதையும் வற்புறுத்துவர் தமிழ்ச் சான்றோர்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்" (குறள்—997)

என விளக்கப்படுதல் காண்க. (ச. சோ. பாரதி)

**இடக்கரடக்கல் :-** நன்மக்களிடத்திலும், பலர் கூடிய ஓர் அவையிலும், சொல்லத்தகாத சொற்களை மறைத்துச் சொல்ல வேண்டும் என்பது தமிழ் மரபு. இதனை இலக்கண நூலார், 'இடக்கரடக்கல்' என்பர். 'கால் கழுவி வந்தான்' என்று கூறும் மரபை இன்றும் தமிழ் மக்களிடத்தே காணலாம்.

**மங்கலம் :-** மங்கலமல்லாத சொற்களையும் மங்கலமாகக் கூறுவது 'மங்கலம்' எனப்படும். செத்தாரைத் " துஞ்சினர்,

இயற்கை எய்தினர், இறைவன் திருவடி நீழல் அடைந்தார்'' என்றும், 'சுடுகாடு' என்பதை 'நன்காடு' என்றும், 'தாலியறுந்தது' என்பதைத் 'தாலி பெருகிற்று' என்றும், 'நச்சுப் பாம்பு' என்பதை 'நல்ல பாம்பு' என்றும், 'காராடு' என்பதை 'வெள்ளாடு' என்றும் கூறவேண்டும் என்பது விதி.

## தமிழ் இலக்கண அமைப்பு:

உயிர் எழுத்து:- உயிர் தானாக இயங்கும்; மற்றுமொரு மெய்யை (உடம்பை) இயக்கவும் வல்லது. அது போன்று உயிரெழுத்து, வேறோர் எழுத்தின் உதவியின்றித் தானாக இயங்கவும், மெய்யெழுத்துடன் இணைந்து அதனை இயக்கவும் வல்லது. (உயிரெழுத்து—மெய்யெழுத்து—உயிர்மெய்யெழுத்து) உயிரின் உதவியின்றி மெய் (உடம்பு) தானாக இயங்கும் ஆற்றல் அற்றது; அதுபோன்றே மெய்யெழுத்தும், உயிரெழுத்தின் உதவியின்றித் தனித்து இயங்க முடியாது. மெய்யெழுத்துடன் உயிரெழுத்தும் புணருகின்றபோது 'மெய்யுயிர்' எனும் பெயர் பெறாது 'உயிர்மெய்' என்னும் பெயரைப் பெறுகின்றது. மெய். உயிர் ஆகிய இவ்விரண்டில் சிறப்புடையது உயிரே என்பதை அறிவித்தற்கு 'உயிர்மெய்' எனக் கூறி அவ்வுயிருக்கு முதலிடம் அளிக்கப்பட்ட சிறப்புப் போற்றத்தக்கது. த் + அ என்பதைக் சேர்த்தால் 'த' என்ற ஒலிக் குறிப்பு உண்டாகிறது. இதில் மெய்யின் வரிவடிவமே காணுகின்றோம். மெய், கட்புலனுக்கு வெளிப்படையாகத் தெரிகின்றது. அதுபோல் 'த' என்பதில் மெய்யின் வரிவடிவம் உள்ளது. ஆனால், உயிர், கட்புலனுக்குத் தெரியாமல் மெய்யை இயக்குவது போல் அகரமாகிய உயிர், தகரமாகிய மெய்யை இயக்குகின்றது. ஆதலின் 'உயிர்மெய்' ஆயிற்று.

'பெயர்ச்சொற்கள் ஏழு வேற்றுமையடைவதும், இறுதியில் விளிவேற்றுமையாவதும், உயிர்கள் அல்லது ஆன்மாக்கள் எழுபிறவி கொள்வதும், இறுதியில் இறைவனால் அழைக்கப் பெறுவதும் போல்வன''* இதனால் பண்டைத்தமிழர்தம் தத்துவ நெறியை அறியலாம்.

''தமிழ்'' என்ற சொல்லின் அமைப்பும், நுட்பமான இலக்கணச் செறிவு உடையது என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது!

* சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்—ஞா. தேவநேயப் பாவாணர்

த்+அ=த; ம்+இ=மி; ழ் - என இதனைப் பிரிக்கலாம். இச் சொல்லில், தமிழுக்கே தலையாய எழுத்தாக நிற்கும் அகரமும், அதனையடுத்துக் கருதத்தக்க இகரமும் அமைந்துள்ளன. 'த்' என்ற மெய்யும் 'அ' என்ற உயிரும், இவ்விரண்டுங் கூடிய 'த' என்ற உயிர் மெய்யும் இடம்பெற்றுள்ளன. 'த்' என்னுங்கால் வல்லினமும், 'ம்' என்னுங்கால் மெல்லினமும், 'ழ்' என்னுங்கால் இடையினமும் ஆகிய மூவின எழுத்துக்களும் இருக்கின்றன எனக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்தாகிய 'ழ்' எனு மெய்யும் இதன்கண் உள்ளது. இனிமை, நேர்மை, என்னும் பொருள்களைத் தரும் இத் 'தமிழ்' என்ற சொல்லின் அமைப்பு, அக்காலத் தமிழர் தம் நுண்மாண் நுழைபுலத்தை நன்கெடுத்துக் காட்டுகின்றது.

முடிவுரை:—

நாம் இதுகாறும் கூறியவற்றால் பண்டைத் தமிழ்ப் பெருமக்களின் பண்பாட்டை, அவர்கள் அமைத்த ஒரு சில சொற்களின் வாயிலாகச் சிறிது கண்டோம்.

"மக்கள் வாய்மையே பேசவேண்டும்; நல்லனவற்றையே கேட்கவேண்டும்; கண்ணோட்டம் உடையவர்களாகத் திகழ வேண்டும்! பெண், தனித்துவாழ இயலாது; தனக்கேற்ற கணவனுடன்தான் வாழ்க்கை நடத்த முடியும். எனினும், குடும்பத்தின் முழுப்பொறுப்பும் ஏற்கும் தலைமையிடத்தை அவள் பெற்று வந்தாள்; புற உலக நிகழ்ச்சிகளைத் தன் கணவன் வாயிலாகவே அறிந்தாள்; குடும்பத்தில், தன் மகனுக்கும் மகளுக்கும், மேலான இடம், தன் மருமகனுக்கும், மருமகளுக்கும் கொடுக்கப்பட்டது.

"நெருங்கிய உறவினர், மரக்கிளை போல் இணைந்து வாழ்ந்தனர். சற்றுத் தூரத்து உறவினர், சுற்றி வாழ்ந்தனர். இரு ஆடவரே, நட்புடன் பழகும் உரிமை பெற்றனர். பெண்டிர், தம் பெண்ணினத்துடனேதான் நட்புரிமை கொண்டாடிப் பழகுவர்; ஆணினத்துடன் நட்புரிமை கொண்டு பழகும் இயல்பினர் அல்லர் !

"மக்களைக் காப்பது, அரசனின் கடமை; அவனுக்கு அறிவுரை கூறுவது அமைச்சனின் கடமை. அவன் ஆளும் நாடு,

பலரும் நாடி வருவதற்கு ஏற்ற நல்வளப்பங்கள் உடையது.

'பாடுபட்டு வருந்தி உழைக்கும் தொழிலை உடைய உழவரே, அக்காலச் சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டனர். குற்றத்தைப் போக்க வல்லவராக ஆசிரியர் விளங்கினர்; மாண்பு உடையவராக மாணவர் விளங்கினர்.

"மக்கள், பலவகை ஆடை, அணிகலன்களை அணிந்து கொள்வதில் விருப்புடையவராய் இருந்தனர். உடம்புக்குத் தம் சொந்த இல்லம், அமைதி தருவது போல, உயிருக்கு 'மோட்ச வீடு" அமைதி தரக் கூடியது என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். எல்லாவற்றையும் இயக்குபவராக, அதே வேளையில், எல்லாவற்றையும் கடந்து நிற்பவராகக் கடவுளைக் கருதினர்.

"ஒழுக்கமுடையவனே மனிதன் ஆவான் என்னும் உயரிய கருத்தை இலக்கணத்திலேயே அமைத்துக் காட்டினர். அன்றியும் எழுத்துக்களின் அமைப்பு முறை மூலம் உயிரின் இயல்பு இன்னது என நுட்பமாய்க் காட்டினர்."

இவையெல்லாம், பண்டைத் தமிழர்தம் பண்பாட்டையும், நாகரிகத்தின் மேன்மையையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன வல்லவோ? *

---

* கோலாலம்பூரில் 1966 ஏப்ரல் 17 முதல் 23 முடிய நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரை.



உலகத் தமிழ் மாநாட்டின் பொழுது கோலாலம்பூர்ப் பல்கலைக் கழக
நூல் நிலையத்தில் நடைபெற்ற பொருட்காட்சியில் மதுரைத்
தமிழ்ச்சங்கத்திலிருந்து அனுப்பப்பெற்ற தமிழறிஞர்
களின் படங்கள் வைக்கப்பெற்ற காட்சி
சென்னை முதலமைச்சர்
சனம் எம். பக்தவத்சலம் அவர்கள்
காட்சியைத் திறந்துவைத்தார்கள்.

# பேச்சு வழக்கில் ஒரு ஒலி மாற்றம்.

[மா. இளையபெருமாள், எம். ஏ., எம். லிட்.,]

"தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"

இலக்கணம் இயற்றினர் தொல்காப்பியர் என்று பனம்பாரனர் பாயிரத்திற் காணப்படுவது வெறும் புகழ்ச்சியல்ல, உண்மை என்பதை விளக்கும் சான்றுகளுள் ஒன்று,

"ஈற்று நின்றிசைக்கும் ஏ இன் இறுதி
கூற்றுவயின் ஓர்அளபு ஆகலும் உரித்தே"

என்னும் சொல்லதிகார நூற்பா. இதற்குச் சொற்களின் இறுதியில் நிற்கும் ஏகாரம், இலக்கிய வழக்குப் போல எப்போதும் முழு ஒலி வடிவம் பெறாது, பேச்சு வழக்கில், சாதாரணமாக எக்ரமாகவும் ஒலிக்கப்படுகின்றது என்று பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு பொருள் கொள்வது பொருத்தமுடையது என்பதை நான்கு காரணங்கள் வற்புறுத்துகின்றன.

1. செய்யுளின் இறுதியில் நிற்கும் ஈற்றசை ஏகாரம் ஒரு மாத்திரையாய் நிற்கும் என்று மேற்கூறிய நூற்பாவிற்கு இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனவரையர் ஆகிய மூவரும் பொருள் கொள்கின்றனர், என்ருலும் வரிவடிவமாக அகநானூற்றின் முதற்பாட்டின் இறுதியடியைக்

"கடல்போற் றேன்றல காடிறந் தோரே"

என்றே உதாரணம் காட்டுகின்றனர். எனவே ஒலி வடிவத்தில் மாத்திரம்தான் இம்மாற்றம் என்னும் கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வரி வடிவத்தில் கொண்டால்,

"எஎன வருமுயிர் மெய்யீ ருகாது"

என்னும் விதிக்கு முரண்பாடு ஏற்படும்.

2. நச்சினர்க்கினியர் ஈற்றசை ஏகாரம் தனக்கு உரிய இரண்டு மாத்திரையே அன்றிப் பின்னரும் ஒரு மாத்திரை உண்டாய் வருதலும் உரித்து என்று உரை எழுதிக் "காடிறந் தோரேஎ" என்பதனையும் உதாரணமாக அமைக்கின்ருர். இது வலிந்து கொள்ளப்பட்ட ஒன்று என்பதை ஏனைய உரையாசிரியர் கொள்ளும் பாடத்தால் தெளியலாம்.

3. கூற்றுவயின் என்பதற்குப் பேச்சு வழக்கில் என்று பொருள் கொள்வதின் பொருத்தத்தைக்

"கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே"

"கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்"

"கூற்றுஅவண் இன்மை யாப்புறத் தோன்றும்"

முதலிய தொல்காப்பிய அடிகள் ஆதரிக்கின்றன.

4. கி. பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின் பிரிந்த மலையாள மொழிக்கு அடிப்படை பெரும்பாலும் பேச்சு மொழியாகும். நாலு, அஞ்சு, ஒம்பது போன்று, எண்ணுப் பெயர்களில் கூடப் பேச்சு வடிவத்தையே இலக்கியச் சொற்களாகவும் ஆளும் ஒரு சிறந்த நடைமுறை மொழி மலையாளம். அம்மொழியில் ஏகார ஈற்றுச் சொற்கள் பல, எகார ஈற்றுச் சொற்களாகவே எழுதப்படுகின்றன.

"கவி வீரர்க்கு இதம் எழும்படி கரந்து குருதிக்
களி உமிண்ணு மண்ணில் வீழ்ந்தனன், வீழ்ந்தளவிலெ"

"பிரியருதாத நீ அங்ஙனெ"

"அருள்செய்து பின்னெ மன்னவர்கோன் இலக்கண
[ னெடும்"

முதலிய இராமசரிதப் பாடல் வரிகளில் அளவிலெ, அங்ஙனெ, பின்னெ முதலிய எகர ஈற்றுச் சொற்களைக் காண்கிறோம். இவ்வாறு பண்டைய மலையாளத்தில் மாத்திரம் அல்ல, அதுபோலெ, நாட்டிலெ போன்று இன்றைய மலையாள நடையிலும் காணப்

படுகின்றன. (அதினுபுறமே, மாத்ரமே முதலிய இடங்களில் இம் மாற்றம் நிகழ்வதில்லை. 'ஆகலும் உரித்தே' என்பது இங்கும் பொருந்தும்.) இம்மலையாளச் சான்றுகள் இடைக்காலப் பேச்சுத் தமிழில், மேற்குறிப்பிட்ட ஒலிமாற்றம் காணப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

எனவே மேற்குறிப்பிட்ட சூத்திரத்தால் கீழ்வரும் உண்மைகள் புலனாகின்றன.

1. இலக்கியச் சொல் வடிவங்களுக்கும் பேச்சு வழக்கிற்குமிடையே காணப்படும் ஒலி வேறுபாடு பற்றிய சிந்தனை தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது,

2. தொல்காப்பியர் காலத்தில் பல ஏகார ஈற்றுச் சொற்கள் எகர ஈறாக ஒலிக்கப்பட்டன.

3. அவ்வெகர ஈற்று வடிவங்கள் தமிழ் இலக்கிய வழக்கில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

# களவியற் காரிகை

—*—

திருச்சிற்றம்பலம் **மு. அருணாசலம்**

களவியல் என்பது, இறையனார் களவியல் என்று வழங்குகின்ற இறையனார் அகப்பொருள் நூல். 'அகப்பொருள் இலக்கணம் இல்லையே' என்று கவலையுற்ற பாண்டிய மன்னனுக்காக மதுரை சோமசுந்தரக் கடவுள் அறுபது அகப்பொருள் சூத்திரங்களைச் செப்பிதழில் எழுதி அளித்தார் என்பது திருவிளையாடல் புராணம் கூறும் வரலாறு. ஆலவாய்ப் பெருமான் இறையனார் என்ற பெயரைத் தாங்கி மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருள் தாமும் ஒருவராய் வீற்றிருந்து இந்நூல் செய்தமையால், இது இறையனார் களவியல் என்று பெயர் பெற்றது. இதன் உரை நக்கீரர் செய்தார் என்பதும் புராண வரலாறேயாகும்.

எனினும், இச்செய்திகள், கதையளவில் சுவையுடையனவே யன்றி, வரலாற்று உணர்ச்சிக்குப் பொருந்தமாட்டா. களவியலுரையில் மிக்க அதிகமாய்க் காட்டப்பெற்ற கோவை மேற்கோள் பாடல்கள், பாண்டிக் கோவை என்ற ஒரு பழைய கோவைக்குரியனவென்று இப்போது அறிகிறோம். இக்கோவை, மதுரையில் அரசாண்டிருந்த பாண்டியன் அரிகேசரி நெல்வேலி வென்ற சீர் நெடுமாறனைப் புகழ்வது. இவன் திருஞான சம்பந்தர் காலத்தவன். இவனுடைய காலம் 7-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி என்பது இப்போது திட்டமாகத் தெரிகின்றது. எனவே, சங்க காலத்தில் (கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரை) இருந்த புலவர் பெருமான் நக்கீரர் 7–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியனைப் போற்றுகின்ற பிரபந்தத்தை எடுத்து மேற்கோள் காட்டுதல் இயலாதது. களவியல் உரை 10-ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்றதென்பது இன்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகின்ற கருத்து. இவ்வுரையாசிரியர் சங்க நக்கீரர் அல்லர்; பிற்காலத்தவர்; ஒரு வேளை இவருக்கும் நக்கீரரென்றே பெயரமைந்து இருக்கலாம்.

இக்களவியல், நூற்பாவாலான 60 சூத்திரங்கள் கொண்டது. இவ்வறுபது சூத்திரங்களுக்கு நேராக அறுபது கட்டளைக் கலித்துறைகளால் அக்களவியலைத் தழுவி மற்றோர் அகப்பொருள் இலக்கண நூல் எழுதப்பட்டிருக்கிறது. இதற்குச் சிறப்பான உரையும் உண்டு. இந்நூலாசிரியர் பெயரும் உரையாசிரியர் பெயரும் தெரியவில்லை; நூற்பெயரும் கூடத் தெரியவில்லை. அரசாங்கத் தொன்னூல் நிலையத்திற்கு ஏட்டுச் சுவடிகள் சேகரித்த காலத்தில், இந்நூல் பிரதியொன்று ஆழ்வார் திருநகரி மலையப்பப்பிள்ளை என்ற கவிராயரிடமிருந்து பெற்று, நாதமுனிப்பிள்ளை யென்பாரால் 1920-இல் காகிதப் பிரதியாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. நூலின் பெயரே தெரியாமல், ''இறையனார் அகப்பொருள் விளக்கம்'' என்று பெயர் புதிதாய்த் தரப்பட்டுள்ளது. கிடைத்த பகுதியில், முதல் பத்து சூத்திரங்களும் இடையில் சில சூத்திரங்களும் இறுதியில் ஆறு சூத்திரங்களும் இவற்றின் உரைகளும் இறந்து போயின. கிடைத்த பகுதிகளை மட்டும், காலஞ்சென்ற வையாபுரி பிள்ளையவர்கள் செப்பம் செய்து ஓர் நூலாக ஆக்கியிருக்கிறார்கள் (1931). உள்ள பகுதி, சூத்திரம் 11 முதல் 54 முடிய. இவை கட்டளைக் கலித்துறையில் அந்தாதியாக வருகின்றன. கிடைத்த துணுக்குகளை ஒன்று சேர்த்து நல்ல நூலாக ஆக்கியிருக்கின்ற பிள்ளையவர்களின் திறனையும் முயற்சியையும் மிகவும் பாராட்ட வேண்டும்.

இந்நூலுக்குக் **களவியல் காரிகை** யென்று, அவர்களே மரபினையொட்டிப் பெயர் வைத்திருக்கிறார்கள். **யாப்பருங்கலம்** என்ற யாப்பிலக்கண நூல் நூற்பாவால் அமைந்து, அதன்பின் அதைத் தழுவிக் கட்டளைக் கலித்துறையில் செய்யப் பெற்றிருந்த நூலுக்கு **யாப்பருங்கலக் காரிகை** என்று பெயர் அமைந்திருப்பது போல, நூற்பாவால் அமைந்த களவியலைத் தழுவிக் கலித்துறையால் இயன்ற இந்த நூலுக்குக் களவியற் காரிகை என்று பெயர் அமைத்தது மிகவும் பொருத்தமே.

இப்படி ஓர் நூல் இருப்பது பலருக்கும் தெரியாது. நூலீனும் அதன் உரை தமிழ் இலக்கிய உலகத்தில் மிகவும் சிறப்பான இடம் பெறுதற்குரியது. உரையாசிரியர் மிகவும் விரிவாக மேற்கோள்களைத் தந்திருக்கிறார். மேற்கோள் நூல்கள் 35. பெரும்பாலான இன்று கிடைக்காதவை; அவற்றின் பெயர்கூட வேறு

வகையில் இன்று அறிதற்கு இயலாதனவாய் உள்ளன. இப்பெயர்களால், தமிழ் நூற் பரப்பு எத்தனைப் பெரிதாய் இருந்தது, எத்தனை நூல்கள் இறந்துபோயின என்பது நன்கு விளங்கும்.

மேற்கோள் நூல்களில் தெரிந்தவை பின்வருவன: களவியல், ஐங்குறுநூறு, கலித்தொகை, குறள், யாப்பருங்கலக் காரிகை, குறுந்தொகை, தமிழ்நெறி விளக்கம், திருக்கோவையார், திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, திவாகரம், நந்திக் கலம்பகம், நற்றிணை, நெடுந்தொகை, புறப்பொருள் வெண்பா மாலை, தொல்காப்பியம் என்பன. இப்பண்டைய நூல்களில் காலத்தால் பிந்தியது புறப்பொருள் வெண்பா மாலை ஒன்றே. இதன் காலம் 10–11 நூற்றுண்டாகும். தமிழ்நெறி விளக்கத்தையும் அதன் பகுதியான பொருளியலையும் இக்காரிகை யுரையாசிரியர் பெயர் சுட்டி எடுத்துக் கூறுகிருர். இவர் குறிப்பால் அந்நூல் ஒரு பிரமாண இலக்கண நூலாகுமென்று தெரிகின்றது; அன்றியும் அவ்விலக்கணமும் அதன் மேற்கோளாயிருந்துள்ள பொருளியல் என்ற பெயரமைந்த பாடல்களும் ஒரே ஆசிரியர் செய்தன என்று எண்ணுமாறு உள்ளவை. இது பிற்கால நூல் என்பது தெளிவு. காலம் 13-ஆம் நூற்றுண்டின் தொடக்கமாயிருக்கலாம். நூல் முழுதும் கிடைக்கவில்லை; கிடைத்த பகுதியை டாக்டர் சாமிநாதையரவர்கள் அச்சிட்டிருக்கிருர்கள்.

மேற்கோள் நூல்களில் அறியப் பெருதன பின்வருவன: அகத்திணை, அரையர்கோவை, இன்னிசை மாலை, ஐந்திணை, கண்டனலங்காரம், கிளவித்தெளிவு, கிளவிமாலை, கிளவிவிளக்கம், கோயிலந்தாதி, சிற்றட்டகம், திணைமொழி, தில்லையந்தாதி, நீறையூரந்தாதி, பல்சந்த மாலை, மழவை எழுபது, வங்கர்கோவை என்பன. பழம்பாட்டு என்பன 33 பாடல்கள் இங்குள்ளன. இவற்றுள் பல, வேறு வகையால் அறிதற்கு இயலாதன. இங்குக் கூறியுள்ள எல்லாப் பாடல்களும் அகத்திணைப் பாடல்களே.

இறையனுர் களவியலில் வரும் மேற்கோள் பாடல்கள். பாண்டிக்கோவை என்ற கோவைக்குரியன வென்று இக்காரிகை உரையினுல்தான் திட்டமாய்த் தெரியவந்தது. இவ்வுரையில் மிகப் பலவான (சுமார் 30) புதிய பாடல்கள் அக்கோவைக்குரியன

வாக இருந்தன. இவையாவும் இப்போது தனி நூலாக அச்சிடப் பட்டுள்ளன.

மேலே குறித்த புதிய நூல்கள் பற்றிச் சில சொற்கள் கூற லாம். இவற்றுள் சிற்றட்டகம், பொருளியல் என்ற இரண்டும் நூற்பாவாலான இலக்கணங்கள். சிற்றட்டகம் கிடைக்கவில்லை, பொருளியல் தமிழ்நெறி விளக்கத்தின் பகுதி. தில்லையந்தாதி, நரையூரந்தாதி இரண்டும் சிவபரமானவை. கோயிலந்தாதி, திருவரங்கத் திருமாலைப் போற்றுவது அரையர் கோவை ஒரு வள்ளலைத் "தயாபரன் தஞ்சை" என்று குறிப்பிடுகின்றது; இத் தஞ்சை, தஞ்சைவாணன் கோவை கூறும் தஞ்சையன்று. மூன்று பாடல்கள் வங்கர் கோவை என்ற பெயரால் குடந்தையில் வாழ்ந்த வங்கர் குலோத்தமனைப் புகழ்கின்றன. மறவை எழுபது திருமழபாடிச் சிவபெருமானைத் துதிப்பது. இவை யாவும் கலித்துறை.

பிற நூல்கள் யாவும் வெண்பா நூல்கள். இவற்றுள் கிளவி என்ற பெயரால் வந்த மூன்றும் அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக எழுந்தனவோ என்று எண்ணத்தோன்றுகின்றது. கிளவி விளக்கம் வண்ணுடன் என்ற தலைவனையும், கிளவித்தெளிவு தில்லை நகரையும், வடகொங்கில் திங்களூரையும் குறிப்பிடுகின் றன. குடந்தையைக் குறிப்பிடும் இரண்டு பாடல்கள் தெரிகின் றன; நூல் பெயர் தெரியவில்லை. கண்டனலங்காரம் என்ற நூல் பொன்னி நாட்டு மன்னன் கண்டன் பூபாலதீபன் என்று புகழும். இரண்டாம் ராஜராஜனுக்குக் கண்டன் என்ற பெயர் உண்டு என்பது இங்குக் கருதத்தக்கது. இவன் காலம் 1146-63.

பிற தனிப் பாடல்களில் வரகுணனது நாங்கை, அதிகன் சிவல்லவன், என்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதுவரையில் நாம் ஆராயாத நூல் பல்கந்தமாலை என் பது. இது கட்டளைக் கலித்துறையாலானது. எட்டுப் பாடல்கள் இவ்வுரையில் வருகின்றன. இது 96 பிரபந்த வகைகளில் ஒன் றான பல்சந்தமாலையன்று. இப்பாடல்களைக் காணும்போது மது ரையை முகம்மதியர் கைப்பற்றிய பின் (சுமார் 1310-25) அயல் நாட்டு முகம்மதியப் படைத் தலைவர் சிலர் பாண்டி நாட்டில்

குடியேறினர் என்றும், அவர்களில் கலிபா மரபில் வந்த வின்னன் என்ற ஒருவன் பாண்டிய நாட்டுக் கீழ்க் கடற் கரையில் உள்ள வகுதாபுரி என்ற காயல் பட்டினத்தில் குடியேறி வாழ்ந்தான் என்றும் அவனைச் சிறப்பித்து ஓர் ஆசிரியர் இந் நூலைப் பாடினர் என்றும் அறிகிறோம். இவ்வாசிரியரின் பெயர் தெரியவில்லை. எனினும், அவர் குறிப்பிடுகின்ற இந்த வின்னன் என்ற முகம் மதியத் தலைவன் முற்குறித்த படையெடுப்பின் காலத்திலோ அதையடுத்தோ வாழ்ந்தவனாவான். இவன் காலம் 1325—50 ஆகவேண்டும். இதுவே பல்சந்த மாலையின் காலமும் ஆகும் இவ்வின்னன், வச்சிர நாட்டில் வகுதாபுரி என்ற காயல் பட்டினத்தில் வாழ்ந்தவன்; அஞ்சு வன்னத்தவர் என்ற குலத்தினன்; இவன் கலிபா மரபில் வந்தவன்; ஆதலால் கலுபதி எனவும் பெறுவான்; வெளிநாட்டினன் ஆனமையால் யவனராசன் எனப் பெறுகிறான். இவன் நாட்டில் யவனர்கள் வந்து 'அல்லா' எனத் தொழுகிறார்கள். பின்வருவது பாடல்களில் ஒன்றாகும்.

நாட்டம் புதைகின்ற தென்நீ மடந்தை நவகண்டமேல்
ஈட்டம் புகழ்வின்னவன் மேவலர்என இங்ஙன் யான்
[வருந்த
வாட்டம் பயின்றுங் ககலின் குழம் பணிந்தாக மெங்கும்
வேட்டம் தெரிகின்ற கொங்கைகள் என்னை மிகை
[செய்தவே.

இப்பல் சந்த மாலையைக் காரிகை உரையாசிரியர் எட்டிடங்களிலும் திருக்கோவை, பாண்டிக்கோவையோடு ஒருங்கு வைத்து மேற்கோள் காட்டுகிறார். இதை மிக்க சிறப்பாக அவர் கருதினர் என்பது தெளிவு. எனவே காரிகை உரையாசிரியர் சுமார் 50 ஆண்டுகளேனும் கழித்து வாழ்ந்தார் என்று நாம் கருதுவது பொருந்தும். அதாவது இவர் காலம் 1400–25 ஆகும்.

இந்நூலாசிரியரே உரையும் சொல்லியிருக்கலாம் என்று எண்ணவும் இடமுண்டு. ஆனல் இதுபற்றி முடிவு செய்வதற்குச் சான்றுகள் இல்லை. எங்ஙனமாயினும், உரை தோன்றுவதற்குக் குறைந்தது 50 ஆண்டுகளேனும் சென்றிருக்கலாம் இது பொருந்துமாயின் காரிகையின் காலம் 1350–75 ஆகும். இங்குக் கருதுகின்ற 14, 15 ஆகிய இரு நூற்றாண்டுகளில், பாட்டியல் இலக்கணங்களும், நிகண்டுகளும் தோன்றியிருக்கின்றன.

12-ஆம் நூற்றாண்டில் நாற்கவிராச நம்பி அகப்பொருள் விளக்கம் செய்தார். இறையனார் களவியலுக்குப் பின் தோன்றி, அதற்கு முன்னிருந்த தொல்காப்பியம் பன்னிருபடலம் ஆகிய அகத்திணை இலக்கணங்களைத் தழுவி, இந் நம்பியார், அவ்விலக் கணங்கள் நூற்பாவால் இயன்றிருக்க, தாம் கட்டளைக் கலித் துறையில் அகப்பொருள் விளக்கம் செய்தார். இது நம்பியகப் பொருள் என்றே வழங்குகிறது. இது தோன்றிய நாளாக, இதைக் கல்வியாளர் அதிகம் பயிலுகிறார்கள். இவரையடுத்துப் பின்வந்த நம் காரிகை யாசிரியர் தாமும் இறையனார் களவியலுக் குப் பின்னூலாக, கட்டளைக் கலித்துறையில் ஓர் இலக்கண நூல் செய்தார் என்றும், அதன் காலம் முற்குறித்தவாறு 1300-25 ஆக லாம் என்றும் நாம் இப்போது அறிகிறோம்.

உரை, சிறப்பான உரையென்று முன்னமே குறிப்பிட் டோம். உரையின் முகப்பிலுள்ள ஆசிரிய விருத்தம் நெல்வேலி வேய்முத்தரை வணங்குவதால், இவர் திருநெல்வேலியினர், சிவபக்தர் என்று அறிகிறோம். தொடக்கத்தில் காட்சி என்ற துறையை அறிமுகப்படுத்துமிடத்தில் இவர் பலவரிகள் களவிய லுரையிலிருந்து அப்படியே எடுத்தமைத்துக் கொண்டிருக்கிறார். இது இயல்பே. இவர் உரையில் விளக்கம் எழுதும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. ஆகவே இவரைப் பற்றி நாம் அறியவும் வாய்ப்பு இல்லை. எனினும் இவருடைய இயல்புகளை ஒரு தன்மை நன்றாய் எடுத்துக் காட்டுகிறது. துறையைக் குறிப்பிட்டு, அத் துறைக்கு மேற்கோள் செய்யுள் தருமிடத்தில் முதலாவதாகத் திருக்கோவையார்; இதன் பின் இரண்டாவதாக, தெய்வத் திணைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட செய்யுள் கிடைக்கு மானால் அது; உதாரணம்: திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, தில்லையந்தாதி, நறையூரந்தாதி, கோயிலந்தாதி (இவை 6 பாடல் கள்); பின்னர்ப் பாண்டிக்கோவை, பல்சந்தமாலை. பின் பிறகோவை கள்; அகவற்பாக்கள் இருப்பின் அவை; கடைசியில் வெண்பாப் பாடல்கள்—இந்த முறைப்படி தவறாது அவர் மேற்கோள் அமைக்கிறார். நடராசப் பெருமானைத் தலைவனாகக் கொண்ட கோவையாருக்குப் பின் தெய்வத்தைப் போற்றும் அகப்பொருட் பாடலையே முடிந்தவரை இவர் கூறுகின்றமையால் தெய்வ பக்தி மிக்கவர் என்று இவரைக் கருதுகிறோம். கோயிலந்தாதி, திருவரங்கத்துத் திருமாலைப் போற்றுவது. இவர் சிவபக்தராயி னும் சமரச நோக்குடையவர் என்று அறிகிறோம். பரந்த கல்வி கேள்வியுடையவர் என்பது மட்டும் இவரைக் குறித்துச் சொல் லத்தக்கது.

# சிறுபாணாற்றுப் படையில் - நோக்கு

—✻—

(மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்.,

தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

தொல்காப்பியர், பாட்டிற்குரிய உறுப்புக்களுள் ஒன்றாக நோக்கு என்பதைக் குறிப்பிடுகின்றார். அதனை விளக்கும்போது,

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"

– (செய். 100)

என்று அவர் கூறுகின்றார். இதற்கு உரை எழுதிய பேராசிரியர், அகநானூற்றுப் பாடல் ஒன்றை (அகம் 4) எடுத்துக்கொண்டு, நுண் பொருள் காட்டி, நோக்கு என்பதற்கு விளக்கம் தருகின்றார். 'மாத்திரை முதலா அடிநிலை காறும்' நோக்கி இன்புறத்தக்க பகுதி, சிறுபாணாற்றுப் படையில் உண்டு. பேராசிரியரைப் பின் பற்றி நாமும், நுண்பொருள் கண்டு நத்தத்தனாரின் புலமை மாண்பில் திளைப்போம்.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை சுவர்தல் நோனாது,
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்—
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூமி பூத்த புழற்கா ளாம்பி:
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்,
வளைக்கைக் கிளைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடைஅடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீட; பொழிகவுள்,

தறுகண் பூட்கை, தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவண்நின்றும் வருதும்.'' (130–143).

என்ற பகுதியில் நோக்கு என்ற உறுப்பு மிகச் சிறப்பாக அமைந் துள்ளது.

## புற நோக்கு

நத்தத்தனார், மேலே காட்டிய பகுதியில், பாணர்களின் வறுமை நிலையையும் (130–140) செல்வ நிலையையும் (141–143) அடுத்து அடுத்துக் கூறுகின்றார். கலைஞர்களின் வாழ்க்கையில் காணப்படும் இருவேறு நிலைமைகளையும் ஒருங்கு அமைத்துக் காட்டுகின்றார். கலைஞர்களின் வறுமை தீராததாகவோ, மாறாத தாகவோ நிலைத்து இருப்பதில்லை என்பதை உணர்த்தவே இங் ஙனம் அமைக்கின்றார்.

செல்வம் வந்தபோது, கலைஞர்கள் தம் பழைய நிலையை மறக்கவில்லை என்பதையும் இங்கே புலவர் புலப்படுத்துகின்றார்; தாம் முன்பு வறுமையால் துன்புற்றதைப் போலத் துன்புறும் ஏழைக் கலைஞர்களை, தம் செல்வ நிலை காட்டி மருட்டாமல் — தாழ்வு படுத்தாமல், ஊக்கம் ஊட்டுவதையும் குறிப்பிடுகின்றார். நத்தத்தனார் இத்தகைய எண்ணம் கற்போர் உள்ளத்தில் நன்கு பதியும் வகையில் இருவேறு நிலைகளையும் ஒருங்கு அமைத்துக் காட்டுகின்றார்

இருவேறு நிலைகளையும் உற்று நோக்கும்போது, நமக்கு மற்றொன்று புலனாகின்றது. வறுமையின் மிகத் தாழ்ந்த நிலையும், செல்வத்தின் மிக உயர்ந்த நிலையும் இப் பகுதியில் இடம் பெற் றுள்ளன பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில் பல்வேறு மக்கள் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை, ஒருவர் வாழ்க்கையில் ஓரிடத்தில் ஒரே நேரத்தில் நிகழ்வனவாய்க் காட்டுவது இலக்கிய மரபு. இம் மரபைக் கையாண்டு, நத்தத்தனார் வறுமைக் காட்சி யைப் பாடுகின்றார். கண் திறக்காத இளங் குட்டிகளுக்குக் கொடுப்பதற்குப் பாலின்றி. துன்பக் குரல் எழுப்பும் நாய் முடங் கிக் கிடக்கும் அடுக்களை, மூங்கில் சரிந்து விழும் கூரை, உப்புப் பொரிந்து விழும் பழஞ் சுவர், கறையான்கள் எடுத்த புற்று

புற்று மண்ணில் முளைத்துக் கிடக்கும் காளான்—இத்தனை காட்சிகளையும் ஓரிடத்தில் அமைத்து, வறுமையின் மிகத் தாழ்ந்த நிலையைக் காட்டுகின்றார். அண்ணல்யானை, அணிதேர், புரவி, பெற்றுச் செல்வக் களிப்போடு வாழும் வாழ்க்கையின் மிக உயர்ந்த நிலையையும் காட்டுகின்றார். இந்த இரு வேறு நிலையையும் பாணர்களின் வாழ்க்கையில் அமைத்து மகிழ்கின்றார் நத்தத்தனார்.

மேலும் அவர், வறுமையைப் பாடும் போது, நயத்தக்க நாகரிகத்தைக் கைவிடவில்லை; சொல்பவர் நா நாண, கேட்பவர் செவி கூச அக்காட்சியைப் புனையவில்லை. செல்வத்தைப் பாடும் போதும் பண்போடு பாடுகின்றார். செல்வக் களிப்பால் பண்பிழந்து, அறிவு மயங்கித் தாழ்ந்து கிடக்கும் நிலையையோ, மற்றவரை ஏவல் கொண்டு செருக்கி வாழும் புன்மையையோ அவர் பாடவில்லை. இருவேறு நிலையையும் நாகரிகமாகப் பாடி நம்மை மகிழ்விக்கின்றார்.

## அக நோக்கு

இதுவரை, பாட்டை மேம்போக்காகக் கண்டு மகிழ்ந்தோம். இனிச் சொல்லழகிலும், பொருள் ஆழத்திலும் ஈடுபட்டு, நத்தத்தனாரின் புலமை மாண்பில் திளைப்போம்.

பாணரின் வறுமையை அவர் இரு கூறாகக் காட்டுகின்றார்: ஒன்று புறத்தோற்றம்; மற்றொன்று அக நிகழ்ச்சி. புறத் தோற்றம் பாணரிடம் பொருள் இன்மையைக் காட்டுகின்றது. அக நிகழ்ச்சி அவர்கள் உள்ளத்தில் தோன்றும் துன்ப உணர்வை வெளிப்படுத்துகின்றது. புறத் தோற்றத்தை எல்லோருக்கும் தெளிவாகக் காட்டி, அக நிகழ்ச்சியை உற்று நோக்கி உணருமாறு நுட்பமாக அமைத்துள்ளார்.

## புறத்தோற்றம்

வீட்டுக் கூரையில் உள்ள மூங்கில்கள் சரிந்து விழுந்து கிடக்கின்றன. பழைய சுவர் உப்புப் பொரிந்து பிளந்து கிடக்கின்றது. அந்தச் சுவரையும் கறையான் கூட்டம் குடைந்து மண்ணைத் தள்ளுகின்றது. அந்த மண்ணில் காளான் பூத்திருக்கிறது. இக் காட்சிகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல, அடுப்பங்

கரை உள்ளது. குட்டிபோட்ட நாய் அங்கே முடங்கிக் கிடக்கின்றது. கண்களைத் திறக்காத — சாய்ந்த காதுகளை உடைய இளங் குட்டிகள் அந்நாயைச் சூழ்ந்து கிடக்கின்றன. தாயின் முலையைப் பசியோடு இருக்கும் இளங் குட்டிகள் கவர்கின்றன. அந்தத் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், நாய் தானே குரைக்கின்றது; துன்பக் குரல் எழுப்புகின்றது.

வறுமைக் காட்சியை இதனினும் உருக்கமாக எவ்வாறு புனைய முடியும்?

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை" (130)

என்ற தொடர் நாய்க்குட்டிகளின் தோற்றத்தைக் காட்டும் சிறந்த ஓவியமாக உள்ளது. இளங் குட்டிகளின் இயல்பையும் தோற்றத்தையும் புலவர் உற்று நோக்கியுள்ளார். மேலும் இத் தொடர், அக் குட்டிகள் பிறந்து இரண்டொரு நாட்களே ஆகின்றன என்பதை உணர்த்துகின்றது. அந்த இளங் குட்டிகள் பசியோடு தாயின் மார்பைக் கவர்கின்றன. அங்கே பால் இல்லை! அது குட்டிகளுக்கு எப்படித் தெரியும்? பால் வாய்க்கு வராததால், மேலும் மேலும் முயன்று பற்றி இழுக்கின்றன. குட்டிகள் தரும் துன்பத்தை நாயால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால், தானே குரைக்கின்றது. குட்டிகளை வெறுக்கவும் அதனால் முடியவில்லை. நாயானாலும் தாய் அல்லவா? ஈன்ற உடன் தன் குட்டிகளை அருகே அழைத்துப் பால் ஊட்ட வேண்டிய தாய் — அவை பால் உண்ணும் போது மகிழவேண்டிய தாய், இளங் குட்டிகள் தரும் துன்பத்திற்கு ஆற்றாது தானே குரைக்கின்றது. இக் கருத்துக்களை எல்லாம்.

'கறவாப் பால்முலை கவர்தல் நோனது
புனிற்று நாய் குரைக்கும்' (131-2).

என்ற அடிகள் வெளியிடுகின்றன.

நாய் உணவின்றி மெலிந்ததால் பால் இல்லை; ஈன்ற அணிமையிலேயே பால் இல்லை. வெளியே சென்று உணவு தேடவும் அதனால் இயலாது என்ற கருத்தை, 'புனிற்றுநாய்', என்ற சொற்கள் தருகின்றன.

அடுப்பங்கரையில் ஆள் நடமாட்டம் இல்லை. அங்கே உணவு சமைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. பல நாட்கள் ஆள் வழங்காததால், நாய் அவ்விடத்தில் சென்று குட்டி போட்டது. இத்தகைய அடுக்களையைப் 'புல்லென் அட்டில்' — என்ற சொற்கள் உணர்த்துகின்றன. உணவு சமைக்கும் அடுக்களையில் படுத்துக்கிடந்தபோதும், நாய்க்குச் சிறிது உணவும் கிடைக்கவில்லை. அத்தகைய கொடிய வறுமை அங்கே குடிகொண்டுள்ளது.

## அக நிகழ்ச்சி

பொருள் இல்லாத நிலையிலும் மனம் தளராதவர் உண்டு. தம் வறுமை நிலையைப் பிறர் நிலையோடு ஒப்பிட்டு, தம் தாழ்வையும் பிறர் உயர்வையும் உணர்ந்து வருந்தும் நுண்ணிய உணர்ச்சி எல்லோருக்கும் அமைவதில்லை. தம் வறுமை நிலையை உணராமலேயே கவலையின்றி வாழ்பவர் உண்டு. ஆனால், பாணர்கள் தம் வறுமை நிலையை உணர்கின்றனர்; உலகத்தின் கண்களுக்கு அஞ்சுகின்றனர்; வறுமை நிலையை மறைக்க முயல்கின்றனர். வறுமையை விட—வறுமையை உணரும் மான உணர்ச்சியும், அதனை மறைக்க முயலும் முயற்சியுமே அவர்களுக்குத் துன்பம் தருகின்றன. இவற்றையெல்லாம் நத்தத்தனர் மிக நுட்பமாக வெளியிடுகின்றார்.

பாணன் மனைவி பசியால் இளைத்துக் காணப்படுகின்றாள். அவள் வயிறு ஒட்டிக்கிடக்கின்றது. அவள் கையில் வளையல்களைத் தவிர வேறு அணிகள் இல்லை. கைவிரல்களில் நகங்கள் வளர்ந்து கிடக்கின்றன. அவற்றைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. அருவருப்புக் கொள்ளவில்லை. பசி வந்திடப் பத்தும் பறந்து போம் அல்லவா? அவள் தோற்றத்தை,

"ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிளைமகள் (135, 6).

என்ற சொற்கள் தெளிவாக உணர்த்துகின்றன. அவள் குப்பையில் முளைத்துக்கிடந்த வேளைக்கீரையைத் தன் கூரிய நகத்தால் கிள்ளி வந்து, வேக வைக்கின்றாள். அதற்குப் போட உப்பும் இல்லை! உப்பின்றியே குப்பைவேளை வேகின்றது. இந்நிகழ்ச்சியை,

"......... கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை" (136, 7).

என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன.

அந்தக் கீரையை உண்ணப் பலர் காத்திருக்கின்றனர். இரும்பேர் ஒக்கல் — என்ற சொற்கள் அவர்களைக் குறிப்பிடுகின்றன. உண்ணத் தொடங்கு முன், தம் வறுமை நிலை பிறர் கண்ணில் படாதவாறு, கதவை மூடுகின்றனர். வறுமை உறுதலும் இயல்பு என்று அறியாது புறங்கூறும் மடவோர் காண்பார்களே—என்று நாணி, அவர்கள் கண்ணிலிருந்து தப்பவே அவ்வாறு செய்கின்றனர். 'மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து' (138) — என்ற அடி, பாணரின் மான உணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. பின்னர், எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, உப்பின்றி வெந்த வேளைக் கீரையைப் பகிர்ந்து, ஆவலுடன் உண்கின்றனர் என்பதை, 'ஒருங்குடன் மிசையும்' - என்ற சொற்கள் உணர்த்துகின்றன.

அவ்வாறு உண்ட போதும் அவர்களுடைய 'அழுபசி வருத்தம்' தீரவில்லை. நல்லியக் கோடனைக் கண்ட பின்னரே அது தீர்ந்தது. பசி என்றும், அழிபசி என்றும், அழிபசி வருத்தம் என்றும் அடுக்கி வந்துள்ள அமைப்பு எண்ணி மகிழத்தக்கது. அத்தகைய அழிபசி வருத்தம் தீர்ந்து, நல்லியக்கோடனிடமிருந்து பாணர்கள் வருகின்றனர் என்பதை,

"அழிப்பசி வருத்தம் வீட .........
யாம் அவணின்றும் வருதும்" (140, 3).

என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன.

## வளம் பெற்ற வாழ்க்கை

நல்லியக்கோடனைக் கண்டபின், பாணர்களின் வாழ்க்கையில், முன்பு நிகழ்ந்தவை எல்லாம் பழங் கதையாய் — கனவாய்ப் போய்விட்டன. இப்போது அவர்கள் யானையும், தேரும் பெற்றுத் தம் ஊருக்குத் திரும்புகின்றனர்.

நல்லியக்கோடன், பாணர்களின் பசியைப் போக்கினுன்; வறட்சியைத் தீர்த்தான். தேவையான அளவு சில நாட்கள்

உண்டு மகிழ மட்டும் பொருள் தந்து, அவன் பாணரை அனுப்பி விடவில்லை. மீண்டும் வறுமை தலைகாட்டாதவாறு பெருஞ் செல்வம் நல்கினன்; யானையைத் தந்தான்; தேரைக் கொடுத்தான். அவற்றை மட்டுமா தந்திருப்பான்? தேரை இழுக்கக் குதிரைகளைத் தந்திருப்பான். யானைக்கும், குதிரைக்கும் வேண்டிய உண்டியும் உறையுளும் தந்திருப்பான். இன்றேல், தம் வீட்டில் உள்ள நாய்க்கும் உணவு இல்லாத பாணர்கள் யானைக்கும், குதிரைகளுக்கும் தீனிக்கு எங்கே போவார்கள்? காழ்சோர் முதுசுவரும், காளான் பூத்த தரையும் உள்ள வீட்டில் வாழும் பாணர்கள் யானையையும், குதிரைகளையும் எங்கே கட்டி வைப்பர்?

யானையும் தேரும் எளிமையானவை அல்ல; மிகுந்த சிறப்புடையவை. யானை, மதநீர் ஒழுகும் கன்னத்தை உடையது; பெருமிதம் உடையது; மணிகள் ஒலிக்கும் பக்கங்களை உடையது; தேர், மிகப் பெரியது.

"......... பொழிகவுள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தேர்" (140—142).

என்ற அடிகள் எண்ணி மகிழத்தக்கவை. இவற்றை எல்லாம் பாணர்கள், வள்ளலிடம் கேட்டுத் தாழ்ந்து நின்று வாங்கி வரவில்லை. உரிமையோடு 'எய்தி' வருகின்றனர்!

பொருளைத் தந்தவர்கள் தம் பொருளை உயர்ந்ததாகவே மதிப்பர். ஆனால் பொருளைப் பெற்றவர்கள், அதன் மதிப்பைப் போற்றும்போதுதான் அதன் இயல்பு வெளிப்படும். இங்கே பொருள்களைப் பெற்று வந்த பாணர்களே அவற்றின் மேன்மையைக் கூறுகின்றனர். எனவே, அவை உயர்ந்தவை என்பதில் ஐயமில்லை.

தம் வறுமை நிலையைப் பிறர் காணாதவாறு கடையடைத்து மானம் காத்த பாணர்கள், செல்வம் வந்த போது தாமே தம் பழைய நிலையைத் தம் வாயால் விளக்கமாகக் கூறுகின்றனர். இவர்களின் பண்பு,

"பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு." (குறள்: 963)

என்ற திருக்குறளை நினைவூட்டுகின்றது.

# திறனாய்வு: திணைமாலை நூற்றைம்பது

புலவர் திரு. தீ. நா. அறிவுஒளி,
திண்டிவனம்.

ஒப்பற்ற இன்பத்தை அளித்து, உள்ளத்தை உயர்த்தி, நல்லுணர்வெழுச்சியைத் தூண்டி, மாந்தனை வளரச் செய்வதே கலையின்—இலக்கியத்தின் இயல்பாகும். உணர்ச்சியூற்றாக அமையும் இலக்கியம் மக்களை மிக எளிதில் கவரும். ஆயின் அஃது அறிவு நலன் பயப்பதாக அமையவில்லையேல், மக்களைப் பாழ் படுத்திவிடும். உள்ளத்தை உயர்த்தி வளர்ப்பது மொழியின் முதற் பயனுமாகும். எம்மொழி உடல் வளர்க்கமட்டும் பயன் படுகிறதோ; அஃது மொழிக்குரிய நோக்கில் முழுநிறைவெய்தா ததேயாகும். உள்ளத்தைத் தாய்போல் பேணிப் போற்றி வளர்ப் பதும், வலிமையூட்டுவதும் தாய்மொழியேயாம்.

தாய் மொழி யிலக்கியமே உயிரை, உணர்வை ஓம்பி வளர்த்து, நாட்டுக்கும் உலகுக்கும் உரிய பண்புடைச் சான்றோ ராக ஆக்கியளிக்கும். தமிழ் மொழியின் அகப்பொருளிலக்கியங்க ளான அரும்புதையற் கருவூலங்கள் தமிழரின் அகநெஞ்சத்தில் கனிந்தூறிப் பொங்கிய சால்புணர்வினின்றும் வடித்த பொங்கு மாத்தேறலாகும். இன்றைய நெறி பிறழ் உலகை நெறிசால் வாழ்வில் ஈடுபடுத்துவிக்கும் பேராற்றல் தமிழின் அகத்திணை இலக்கிய—இலக்கணங்களிடமே அமைந்துள்ளது.

திணைமாலை நூற்றைம்பது கணிமேதாவியார் இயற்றிய இன்பக் களஞ்சியமாகும்; வெண்பாயாப்பிலமைந்த அகத்திணை நூல்களுள் பெரியதும்; அரியதுமாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக இதனைக் கருதுவர். இந்நூலின் சிறப்பு களும், தனித்த இலக்கியச் சுவையும் ஆராய்ச்சிக்குரியவாம். பண்டைப் பண்பாட்டை விளக்குவதிலும், அக்காலைய வாழ்வியல்

வரலாற்றையும், தமிழருணர்வையும் புலப்படுத்துவதிலும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு. தொல்காப்பியம், குறள் ஆகிய வற்றோடு ஓரிணையாக வைத்து, கருதுதற்குரியது திணைமாலை நூற்றைம்பது.

'நாடகக் கூற்றாக' ஒவ்வொரு வெண்பாவும் ஒரு கதை யுறுப்பினர் வாய்மொழியாக அமைந்துள்ளது. அகத்திணைப் பாக்கள் நாடக இலக்கியப் பண்பு நலனமைமையைப் பொலிவது நம் இலக்கிய ஆராய்ச்சிக்கு விருந்தாகிறது.

இந்நூலில் ஒவ்வொரு திணைக்கும் முப்பது பாக்கள் மேனி, ஐந்திணைக்கும் நூற்றைம்பது பாக்களே இருக்கவேண்டும். ஆயின் தற்போது 153 பாக்கள் கிட்டியுள்ளன. இது தவிர ஏனைய நூல்களில் பெரும்பான்மையாகக் காணக் கிடைக்காத வகையில், இந்நூலில் பாயிரம் நூலின் பின்னே அமைந்துள் ளது!*

"முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்
கனிந்தார் களவியற் கொள்கைக்—கணிந்தார்
இணைமாலை யீடிலா இன்றமிழால் யாத்த
திணைமாலை கைவரத் தேர்ந்து"

இப்பாடல் அறிவிக்கும் வரலாற்றுச் செய்தி நம் அறிவைத் தூண்டியியக்குகிறதாக உள்ளது. 'களவியற் கொள்கையை' முனிந்தவர்களின் முனிவு நீங்கும் வண்ணம் 'கணிந்தார்' (கணி மேதாவியார்?) முத்துப்போன்ற வெண்பாக்களால் ஈடில்லாத இனிய தமிழ் மொழியில் அகப்பொருள் நுட்பங்கள் இணைந் தமைய முறையாகத் தொடுக்கப்பெற்ற மாலைபோலத் 'திணைமாலை' என்ற பெயரிட்டமைத்தார். இதனால் மீண்டும் களவியற் கொள்கை மக்கள் வாழ்வில் கைவரப் பெறவேண்டு

---

* இப்பாயிரத்தினைக் கூர்ந்து ஆராய்ந்தால், இஃது கணிமேதா வியரால் இயற்றப்பெற்றதன்று என்பதும் வேறொரு புலவ ரால் பாராட்டி இயற்றப் பெற்றதென்பதும் நன்கு புலனாகும். நூலாசிரியர் பெயராகக் 'கணிந்தார்' எனப்படுவது கருதற் குரியது.

மென்பது நோக்கமாகும்' என்ற கருத்துரை, தமிழகத்தின் இடைக்கால அயற்கொள்கை மயக்கத்தை அகற்றவே புலவர் இதனை இயற்றினர் என்பதை நிலைநாட்டுகிறது.

அகப்பொருளறிவு குன்றியமையால் நாட்டில் தமிழ்ப் பற்றும், ஒழுக்கப்பற்றும் குன்றியுள்ளன. ஆகவே அகப்பொருளறிவு மீண்டும் செவ்விய முறையில் அறிவுறுத்தப்படல் வேண்டும் என அன்றே உணர்ந்து கணிமேதாவியார் எளிய வெண்பாக்களால் அறிவுறுத்தினர். இக்காலத்திற்கும் அகத்திணையறிவு நன்கு அறிவுறுத்தப்படவேண்டும்.

அகப்பொருள் நயங்களை யுணரும் சுவையுணர்வு பெருகிவிட்டால், மொழி வளத்தின் அருமை பெருமையைத் தாமே மதித்துத் துய்க்க மாநிலத்தார்க்கு ஆற்றல் அமைந்து விடும். அப்போது இயற்கையான தாய் மொழிப் பற்றும். மொழித் தொண்டும் அமையும்.

தமிழகத்தில் தமிழ்ப் பழம்ஒழுகலாறுகளையும் பண்பாடுகளையும், வாழ்வியல்பையும், மரபையும் புறக்கணித்து விட்டுப்' பிறர் பழக்க வழக்கங்களைப் 'போலச் செய்யும்' முறையால் பார்த்துக் கைக்கொள்ளும் வேண்டாத தீப்பழக்கம் எவ்வாறோ புகுந்தது. இப்பழக்கம் தமிழர் அகம்-புற வாழ்வையே மிகவும் தாக்கித் தடுமாற வைத்துவிட்டது. 'தீபபழக்கம் மேற்கொள்ள எளிதாக இருக்கும்; ஆனால் அதை முறிப்பதே கடினம்' இன்றும் தமிழரிடம் இக்குறைபாடு இருக்கிறது. தமக்கே உரியவற்றைப் பேணிப் போற்றிக் காப்பாற்றாமல், பிறர்க்குரியதைத் தாம் பேண முனைவது நகைக்குரிய செயலல்லவா!

இந்த அவல நிலையை மாற்றவே கணிமேதாவியார் அன்று திணைமாலையை இயற்றி இலக்கியப் புரட்சி செய்தார். இன்று நம் பண்டை இலக்கியங்களை மீண்டும் புதுமை நோக்கில் மக்களுக் கெடுத்துரைத்து 'அறிவுறுத்தல் புரட்சி' மேற்கொள்வது சால இன்றியமையாததன்றோ?.

## இலக்கியத் தகுதி

திணைமாலையின் இலக்கியத் தகுதி ஒரு தனித் தன்மை

சான்றது. நுட்பமான உணர்ச்சி நிலைகளையெல்லாம் தமிழோவிய மாக இந்நூல் காட்டுகிறது. ஒவ்வொரு பாட்டும் எட்டுத்தொகை யின் பாக்களைப் போன்றே சிரிய இலக்கிய உணர்வாக்கம் பொருந் தியதாக அமைந்துள்ளது.

அவன் அவளைப் பிரிந்து சென்று நெடுநாட்களாகி விட் டன. பிரிந்து செல்லும் போது அவன், "கண்ணே, கலங்காதே — கார்ப்பருவம் வருமுன் நான் வந்துவிடுவேன். அதுவரை சற்றே பொறுத்திரு." என்று ஆறுதல் மொழி கூறிச் சென்றான்.

அவன் குறித்த கார்ப்பருவம் வந்துவிட்டது. ஆனால் அவன் வரவில்லை. காதலியின் அன்பு நெஞ்சம் அவன் வருகைக்கு ஏங்கி ஏங்கித் துடித்தது. அவன் வரவில்லையே என அவள் நைந்தாள். எப்படியோ இத்தனை நாட்கள் அவன் பிரிவைப் பொறுத்துக் கொண்டிருந்துவிட்டாள். ஆனால்? இனி?

பகற் பொழுதை உண்டாக்குபவனாகிய கதிரவனின் வெயிற் கதிர்கள், நிலத்திலுள்ள நீரையெல்லாம் குடித்துக் கார் முகிலை உண்டாக்கியது. அக்கார், மழைப்பெயலைப் பொழிவித்தது, முல்லை நில முழுதும் குளித்து முழுகியது போல மழையினால் புதுப் பொலிவு பெற்றது. அம்மழையால் நீண்ட கொடிகள் கொழு கொழுவென வளர்ந்தன. அவை மரங்களின் மீது படர்ந்தன. அதைப் பார்த்தாள் அவள். அவள் நெஞ்சிலே துன்பக் கொடி படர்ந்தது; கன்னங்களில் கண்ணீர்க் கொடி படர்ந்தது; அவள் உயிர்க்கொடி படபடத்தது!

அப்போது தோழி வந்தாள். வந்தவள் தலைவியின் கண்ணீ ரைக் கண்டாள். 'ஏன் அழுகிறாய்? உனக்கென்ன கவலை?' எனத் தோழி ஒன்றும் அறியாதவளைப் போல வினவினாள்.

தலைவி பேசாமல் முல்லை நில இயற்கைக் காட்சியைத் தன் கையால் சுட்டிக் காட்டினாள். தோழிக்கு ஏதும் விளங்கவில்லை.

"தோழி, பகலவன் தன் வெயிலால் உலகிலிருந்து நீரைக் கவர்ந்து உண்டான். உலகம் வறட்சியும் வெப்பமும் அடைந்தது. வானில் திரண்ட கார் உள்ளங்குளிர்ந்து மழை பொழிந்தது. மழைநீரால் முல்லை நிலம் தளிர்த்தது. கொடிகள் வளர்ந்தன;

மரங்களிற் படர்ந்துகொண்டிருக்கின்றன. அவை படர்ந்திருப்பதை நீயே உன் கண்களால் நன்றாகப் பார்! முல்லைச் செடிகள் பெரியதும் குளிர்ச்சியுடையதுமான செம்முல்லைப் பூச் செடிகளுடன் கூடி, குருந்த மரங்களைத் தம் சுற்றமாகிய கணவர்களைக் காதலியர் இறுகத் தழுவி யணைத்துக் கொள்வதைப் போலத் தழுவிக் கொண்டிருப்பதைப் பார்! அக்குருந்த மரங்கள் ஒடுங்கி நிற்கும் வண்ணம் இச் செடிகள் அழுத்தமாக அணைத்துப் படர்ந்திருப்பதைப் பார்!'' என்றாள்.

இத்தகு கார்ப்பருவத்திலே தன் காதலியை இறுக அணைத்துக் கிடவாமல் தலைவர் பிரிந்திருக்கிறாரே! இது முறையா? அவர் வருவதாகக் குறித்துச் சென்ற கார்ப்பருவத்திலும் வரவில்லையே! எவ்வாறு ஆற்றியிருப்பேன்? என்ற குறிப்பு அவள் கூற்றில் எதிரொலிக்கிறது.

'சூழ்நிலைதான் மக்கள் உள்ளத்தில் உணர்ச்சிகளை உண்டாக்குகிறது. சூழ்நிலைதான் மக்கள் மனத்தில் உணர்ச்சிகளை மிகுவிப்பதும் குறைப்பதுமாகும். ஆகவே சூழ்நிலை மக்கள் வாழ்வைத் தாக்குகிறது. மக்கள் சூழ்நிலைக் கேற்பவே வாழ்வை, வகுக்கின்றனர்' என்ற உண்மைகளைப் பாடல் 'கருத்தெதிரொலிகளாக' நமக்கு உணர்த்துகின்றன.

''எல்லை தருவான் கதிர்பருகி யீன்றகார்
கொல்லைதரு வான்கொடிகள் ஏறுவகாண்! – முல்லை
பெருந்தண் தளவொடுதம் கேளிரைப்போற் காணாய்!
குருந்(து)அங்(கு) ஒடுங்(கு) அழுத்தம் கொண்டு.''

(தி. நா: 15)

'எல்லை தருவான் கதிர்பருகி யீன்ற கார்' என்ற பாடலடி இற்றை நாள் அறிவியற் கருத்தைப் பாட்டுவடிவில் தருவதை உஉன வேண்டும். முகில், கதிரால் நீர்பருகப்பட்டுருவாகும் ஒன்று என்பதைப் பண்டைத் தமிழர் தெளிவாக உணர்ந்திருந்தமை அறியலாம்.

தலைவியினுள்ளம் எவ்வளவு காதற் செறிவுடையது என்பதை நாம் தெற்றன அவள் கூற்றால் உணர்கிறோம். செடி மரத்

திற் படர்வது அவளுக்குக் கொழுநரைத் தழுவும் மகளிரையே உணர்த்துகிறது. இயற்கையின் அறியாச் செய்கை கூட, மக்களின் அறிவுணர்ச்சிச் செய்கையோடு பொருத்தியுணரும் உள்ளம் தலைவிக் கிருப்பதைப் புலவர் காட்டுகிறார். 'தனக்கு இன்றியமையாது வேண்டிய அழுத்தமான காதற்றழுவுகை அந்தக் குருந்த மரத்துக்குக் கிட்டியிருக்கிறதே! என்ற காதலேக்கத் துன்ப மெய்ப்பாடு பாட்டின் பொலிவுடன் செறிந்துள்ளது. இதைவிட ஒரு பாடலின் வெற்றிற்கு வேறு என்ன வாய்ப்பு வேண்டும். காதலியின் உணர்வழுத்தமெல்லாம் அவள் மொழியெழுச்சியில் செறிந்து திணிந்துள்ளமை அறியத்தக்கதாம்.

## குறளுக்கு விளக்கம்

அவனும் அவளும் காதலில் ஒன்றினர்; களவு வாழ்வில் கண்டு அளவளாவி வந்தனர். தோழியின் உதவியால் காதலனும் காதலியும் சந்தித்துப் பேசுவர். அப்பெண் தலைவிக்குரிய நிலத்தில் தினைப் பயிர் விளைந்திருந்தது. கதிர்களைப் பறவைகள் கவராதவாறு காவல் காக்கத்தான் அவள் தினைப்புனத்துக்கு வந்தாள். ஆனால் அவள் உள்ளத்தை இன்னொருவன் கவர்ந்துகொள்ளப் பறிகொடுத்து விட்டாள்.

எவ்வளவு நாட்களுக்குக் களவுக் காதல் வெற்றிதரும்!

தினைப்பயிர் நன்கு முற்றியது. கதிர்கள் அறுவடைக்குத் தக்க தகுதி யடைந்திருந்தன. அக்கால மக்கள் வேங்கை மரம் பூவெடுத்தால் அந்நல்ல நாட்களில் தினைக் கதிரை அறுவடை செய்வார்கள். இது அக்கால உழவர் வழக்கம். அதுபோல வேங்கை மரங்கள் பூத்தன. அதனால் தலைவியின் பெற்றோர் அறுவடைக்கு ஆவன செய்ய முற்பட்டார்கள். தலைவியும் இது குறித்துக் கவலை கொண்டாள். காதலனுக்கு இனிமேல் தினைப்புனத்தில் களவில் சந்திக்க முடியாது என்பதை எவ்வாறு கூறுவது என மயங்கினாள். வீட்டுக்குப் போய்விட்டால், காதலனைப் பார்க்கக் கூட முடியாது. இந்நிலையில் காதலனோ திருமண ஏற்பாடும் செய்ய முயலவில்லை. பலவகையில் தலைவி எண்ணி வாடினாள். தோழி துணிவானவள். உண்மையை வெளியே கூறிவிடுவதுதான் சிக்கலை நீக்குவதற்குரிய எளியவழி என்பதை அறிந்தவள் தோழி.

அன்று தலைவியைச் சந்திக்கத் தலைவன் வந்தான். தோழி தலைவியோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அதனால் மறைவான இடத்தில் அவர்களிருவருக்கும் அருகிலே நின்றிருந்தான் அவன்.

அவன் வந்ததை யறிந்தாள் தோழி. தலைவனிடம் அவர்கள் பிரிவு நேரம் நெருங்குவதை உணர்த்த இதுவே தக்க நேரம் என எண்ணினாள். உடனே தலைவியை நோக்கி நயமாகப் பேசலானாள்:

"மை தீட்டிய பெரிய கண்களையுடைய மயில் போலப் பேரழகும் சாயலும் கவர்ச்சியும் வாய்ந்த தலைவியே! நாம் ஒன்று நினைக்க அது வேறொன்று நடக்கும் போலிருக்கிறதே!" என்றாள்

தலைவி திடுக்கிட்டாள். "தோழி, நீ என்ன கூறுகிறாய்? என் வாழ்வில் இப்போதுதானே இன்பம் படர்ந்திருக்கிறது! காதலர்பால் களவு வாழ்வில் இனிமை காண்கிறேனே! இப்போது–?" எனக் கேட்டாள்.

தோழி, "தலைவி, 'பனை' என்ற அளவு தமிழில் மிகப் பெரிய எண். அந்த அளவுக்கு நீங்காத காதலின்பமாகிய விளைவை நாம் களவுப் புணர்ச்சியில் சுவைக்கவேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம் எண்ணம் நடக்காது போலிருக்கிறதே!" என்று கூறினாள்.

தலைவி திடுக்கிட்டு. "ஏன் தோழி?' எனப் பதறிக் கேட்டாள். தலைவனும் திடுக்கிட்டான். தோழி கூறப் போவதைக் கூர்ந்துகேட்க முற்பட்டான்.

"தலைவியே, நன்றாக உழைப்பவனுக்குச் செல்வம் செழித்து விளைவதுண்டல்லவா? அதுபோலத் தினைப்புனப் பாத்தியிலே தினைப்பயிர் நன்றாக விளைந்துவிட்டது. அதைக் காட்டுவது போலத் 'தீத்தூண்டுகையார்' பூத்துவிட்டது."

"தீத்தூண்டு கையாரா? என்ன தோழி சொல்கிறாய்?" — தலைவி குழப்பத்தோடு கூறினாள்.

தோழி புன்னகை பூத்தாள். தீ–தீண்டினால் பொருள் என்ன வாகும்? 'வேம்' (வேகும்) அல்லவா? அந்த 'வேம்' என்ற

சொல்லோடு 'கை' யென்பதைச் சேர். என்ன சொல் கிடைக்கும்?'' என்று தோழி கேட்டாள்.

''வேம்+கை=வேங்கை!'' என்ருள் தலைவி.

''ஆம். வேங்கை மரங்கள் பூத்துவிட்டன. இதுதானே அறுவடைக்குரிய அறிகுறி! இந்த வேங்கைப் பூவெடுத்ததால் உன்னைத் தலைவனேடு சேரவொட்டாமல் பிரிக்கச் சூழ்ச்சி செய்துவிட்டதல்லவா? இந்த வேங்கை பூத்ததை நீயே பார்! இனி நம் எண்ணம் ஏக்கமெல்லாம் என்ன ஆகும்? நீ வீட்டுக்குப் போய் விட்டால் வீட்டை விட்டு வெளிவர முடியுமா? அதனால்தான் நாம் நினைத்தது ஒன்று; நடப்பது வேறென்று என்று சொன்னேன்!'' என்று கூறி முடித்தாள் தோழி.

தோழியின் சுவையான–திறன்மிக்க–பேச்சே பாட்டோவியமாக வடிக்கப்பட்டுள்ளது:

"வினைவிளையச் செல்வம் விளைவதுபோல் நீடாப்
பனைவிளைவு நாம்எண்ணப் பாத்தித் — தினைவிளைய
மையார் தடங்கண் மயில்அன்னாய்! தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்!'' (தி. நூ. 5)

புலவரின் புலமையாற்றலின் கொடுமுடியாக இப்பாட்டு உருவாகியிருக்கிறது. சொற்றிறன் மிக்கவர் கணிமேதாவியார் என்பதற்குத் 'தீத்தீண்டுகையார்' என்ற சொல்லாட்சியே போதுமான சான்ருகும். இக் குறிப்புமொழி மறக்க முடியாத தொன்றல்லவா?

தலைவிக்குத் தினைப்புனத்தில் வேலை தீர்ந்து விடுவதால், அவள் குடும்பத்தார் அவளை வீட்டுக்கு அனுப்பி விடுவர். இதில் வேங்கை மரம் செய்வது ஒன்றுமேயில்லை. ஆனல் வேங்கைமரம் தான் காதலியைக் காதலனிடமிருந்து பிரிக்கும் 'கொடியவனுக' இருப்பதாகத் தோழி கற்பனை செய்து கூறுவது நினைக்குந் தோறும் சுவைபயப்பதாகும். வேங்கையை 'ஆர்' விகுதியிட்டுச் சிறப்பித்துக் கூறுவது தோழியின் எள்ளல் குறிப்பை நன்கு காட்டுகிறது.

இத்திணைமாலை நூற்றைம்பது பாவால் திருக்குறள் பாக்களின் சொல்லாட்சிக்கு அரிய விளக்கம் கிட்டுகிறது. 'பனை'

என்ற பேரளவெண் குறளில் மூன்று இடங்களில் ஆளப்பட்டுள்ளது.

அறத்துப்பாலில் 'செய்ந் நன்றியறிதல்' தலைப்பிலும், பொருட்பாலில் 'குற்றம் கடிதல்' (44) தலைப்பிலும், காமத்துப் பாலில், புணர்ச்சி விதும்பல் (129) தலைப்பிலும் அம்மூன்று குறட்பாக்கள் உள்ளன.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்" (104)

"தினைத்துணையாம் குற்றம்வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழி நாணு வார்" (433)

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்" (1282)

'பனை'என்பது ஒரு பேரளவை யெண் என்பதும், தினை சிறு அளவுக்குக் குறியென்பதும் கணிமேதாவியாரின் பாவால் தெளிவாகிறது. தினையும் பனையும் புலவர்கட்கு ஒரு சேர நினைவு வருவது எண்ணுதற்குரிய தொன்றல்லவா? குறள் வழி நின்று கணிமேதாவியார் தம்மிலக்கியப் படைப்பை உருவாக்கிய திறம் நினைந்துவத்தற்குரியதாம். வள்ளுவரின் காமத்துப் பாலில் ஊறித்திளைத்துச் சுவைத்தவர் கணிமேதாவியார் என்பதற்கு வேறொரு 'எண்ணிக்கை' குறிப்புள்ள பாட்டே சான்று:

தலைவன் பிரிந்து சென்றுவிட்டான். அவன் திரும்பி வருவதாகச் சொன்ன பருவம் கார் காலமாகும். தலைவி வாழுமிடம் முல்லைநிலம். பொன்போன்ற வெயிலொளி வீசியதால் முல்லை நிலக் காடுகளிலுள்ள மரஞ்செடிகொடிகள் எல்லாம் காய்ந்து வெறுந்தரையோடு காட்சியளித்தன. பெரிய மலைகளும் பசுமையிழந்து காய்ந்திருந்தன கார் காலத்துக்கு முன்னே.

கார்ப்பருவம்வந்து மழைபொழிந்தது.மரஞ்[illegible] பசுமை போர்த்தன. காய்ந்த தரையெல்லா[illegible] லென்ற காட்சி. பெரிய மலையும் பசுமை பூன்[illegible] லெல்லாம் பூத்துக் குலுங்கின.

இவையெல்லாம் பார்த்துத் தலைவி வருந்தினாள். அதைக் கண்ட தோழி, "இது கார்காலம் அன்று. வீணாகவருந்தாதே' என ஆறுதல் கூறினாள். அதற்குத் தலைவி, "என்னுடம்பிலுள்ள ஒளி-பொலிவு-அழிந்ததைப் போலவே, என் கண்களும் ஒளியிழந்து விட்டன. நான் தலைவரைப் பிரிந்த நன்மையிழந்த நாட்களின் எண்ணிக்கை மிகவும் மிகுதியாகி விட்டன. என் மென்மையான விரல்களால் அவர் சென்ற நாட்களைக் கோடிட்டுக் கணக்கிட்ட சுவரில்-எண்ணி எண்ணித்? தேய்ந்தன. என் தோள்களும் வனப்பிழந்தன" எனக் கூறினாள்.

பருவங்கண்டு தலைவி துன்பப்பட்டுக் கூறிய இக்கூற்றைக் கணிமேதாவியார்,

"பொன்வாளால் காடுஇல் கருவரை போர்த்தாலும்
என்வாளா என்றிஇலங்கு எயிற்றாய்!-என்வாள்போல்
வாள்இழந்த கண்தோள் வனப்புஇழந்த மெல்விரலும்
நாள்இழந்த எண்மிக்கு நைந்து." (தி. நூ: 99)

இப்பாடல்குறள் காமத்துப்பாலில் 'அவர்வயின் விதும்பல்' (127) தலைப்பில்,

"வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல்" (1261) என்ற பாவின் அடிச்சுவட்டில் மலர்ந்திருப்பதை அறியலாம்.

## குறளும் திணைமாலையும்

அக்காலத்தில் காடுகளே எங்கும் மிடைந்து மண்டிக் கிடந்தன. அக்காட்டை யழித்தே நாடு உண்டாக்கினர் 'காடு வெட்டி' நாடாக்கிய மன்னர் இனத்தைக் 'காடுவெட்டி' 'காடவர்' என்றே வரலாறு வழங்கும். கரிகால் திருமாவளவன் தொண்டை நா... டக் காடுகெடுத்து நாடாக ஆக்கினான் என வரலாறு ...கிறது.

...டைச் சேர்ந்தவர் மலை சார்ந்த பெருங் காட்டை ...னர். தகரம் என்ற மரங்களும், வகுளம் ...ரங்களும் அக்காட்டில் மிகுதியாக இருந்தன.

இவ்வளவு மரங்களையும் பயனற்ற புதரை வெட்டி அழிப்பதைப் போல அம்மலைவாழ் மக்கள் வெட்டியழித்தனர். பிறகு அங்கே தாம் விரும்பும் செந்தினையை, உழுது விதைத்துப் பயிராக்க முனைந்தனர். இந்தக் குறவர் குடியில் தோன்றியவள் தலைவி. அவள் குடி முன்னோர்க்கு மரங்களை வெட்டும் போது இரக்கம் இருந்ததா? இல்லை. அதே போல இவளுக்கும் காதலனிடம் இரக்கம் இருக்குமா? இருக்காதோ எனத் தலைவன் ஏங்கினன். அத்தலைவியின் தோழியிடம் சென்றான்; "தோழியே, மணம்மிக்க மரக்காடுகளை, அம்மரங்களின் துன்பத்தை எண்ணிப்பாராமல் கொன்றார்கள் குறவர்கள். அம் மலைநாட்டுத் தலைவர்களின் பின்னவளாகிய (தங்கை) உன் தலைவி, பிறர் படும் துன்பத்திற்குத் தான் உள்ளம் இரங்கி வருந்தும் அருளாகிய தகுதியுடையவளா? இதை ஆராய்ந்து சொல்லுக" எனக் கூறினன்.

அவளால் காதல்நோய் கொண்டவன் அவன். தலைவன் துன்பத்துக்கிரங்கி அவன் வாழ்வு தழைக்க அவள் காதலிப்பாளா? என அறியவே இவ்வாறு தோழியிடம் கேட்டான். இதோ அப்பாட்டு:

"நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது, வேண்டி-யெறிந்துஉழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்துஇனைய வல்லளோ நோக்கு!" (தி நா: 24)

இப்பாடல், "அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய், தம் நோய் போல் போற்றாக் கடை" (315)என்ற குறட்கருத்தின் 'வழி இலக்கியமாக' மலர்ந்துள்ளமை அறிதற்குரியதாம்.

காட்டு வழிகளைக் கடந்தே ஒரு நாட்டினின்று அடுத்த நாட்டிற்குச் செல்லவேண்டும். காடுகளில் வாழ்ந்த யானைகள் காட்டு வேடரால் குழியிடைப் படுக்கப் பெற்றுச் சிக்கின. இவை தப்பிச் செல்ல வழியின்றித் துன்புற்று மாண்டன. காட்டில் வாழும் மக்கள் தம் மிகைப்பசியைத் தணித்துக்கொள்ள அந்த யானைகளின் ஊனை எடுத்து உண்ணுவது வழக்கம். அத்தகைய கொடியோர் வாழும் காடுகளைக் கடந்தே தமிழகத் தலைவர்கள் பிறநாடுகளுக்குப் பொருளீட்டி வரச் செல்லுவர். அதுபோலச் செல்லத் தலைவன் முடிவு செய்தான். நேரே தலைவியிடம் தன்னுள்ளக்

கருத்தைக் கூறினால், அவள் மறுப்பாளே என மயங்கினான் தலைவன். தோழியிடம் தன் கருத்தைத் தெரிவித்து, 'நீ இதனை நயமாகத் தலைவிக்குக் கூறி அவளுடைய இசைவைப் பெறவேண்டும்' என வேண்டினான். தோழி தலைவனின் கருத்தைத் தலைவிக்குக் கூறினாள். தலைவி, "நீ தான் உண்மையில் சிறந்த தோழி!(?) ஆனால், அவர் போவது உறுதிதானா? அவர் பிரிவைப் பொறுத்திருப்பவர்களிடம் அவர் பிரிவைப் போய்ச் சொல். என்னிடம் சொல்லவேண்டா" என்றாள். தலைவன் பிரிந்த அக்கணமே தன்னுயிர் பிரியும் என்பதை எவ்வளவு நுட்பமாகத் தலைவி உணர்த்திவிட்டாள்!

"ஒல்வார் உளரேல் உரையாய் ஒளியாது
செல்வார் என்றுய்நீ சிறந்தாயே!—செல்லாது
அசைந்துழிந்த யானை பசியால் ஆள்பார்த்து
மிசைந்துழியும் அத்தம் விரைந்து" (தி. நூ: 86)

இப்பாடல், "செல்லாமை யுண்டேல் எனக்கு உரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க்கு உரை" (1151) என்ற குறட்பாவின் எதிரொலிப் பாவாக அமைந்துள்ளமை சுவைத்தற்குரியதாம்.

பொருளையே பொருட்படுத்தி அருளை ஒரு பொருளாக மதியாமல் செல்வ வளம் கொண்டு வரப் பிரிந்தான் தலைவன். அவனை நோக்கித் தோழி, "ஐயா, வளமையை வாரிக்கொண்டு வரப் போகிற தலைவரே! இவளுடைய இளமைப் பருவம் கழிந்த பின், அதையும் உம்மால் கொண்டுவர முடியுமா? அப்படி முடியுமென்றால் வெளிநாடு செல்ல நீ விரும்பலாம்!" என்றாள்.

"பொருள்பொருள் என்றார்சொல் பொன்போலப் போற்றி
அருள்பொருள் ஆகாமை ஆக—அருளான்
வளமை கொணரும் வகையினான் மற்றோர்
இளமை கொணர இசை" (தி. நூ: 85)

இப்பாடல், "அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம், பூரியார் கண்ணும் உள" (241) என்ற குறட் கருத்தின் விளக்கப்பாவாக அமைந்திலங்குகிறதன்றோ?

குறளில் ஒரு காதலன், தன் காதல் நோய்க்குக் காதலியே மருந்தாவாள் என்கிறான், "பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை

தன் நோய்க்குத்தானே மருந்து" (1102) இதனையடிப்படையாகக் கொண்டு சற்றே மாற்றிக் கணிமேதாவியார், காதலிக்குத் தலைவன் மருந்தாக விளங்கினன் எனக் கூறுகிறார்:

"தண்கயத்துத் தாமரைநீள் சேவலைத் தாழ்பெடை
புள்கயத்து உள்ளும் வயலூர! — வண்கயம்
போலுநின் மார்பு புளிவேட்கைத்து ஒன்றுஇவள்
மாலு(ம்) மாறுநோய் மருந்து" (தி. நூ: 142)

இவ்வண்ணம் திணைமாலை முழுதும் குறளின் ஆட்சியும், குறளையும் அலையின் எதிரலையும் நிலவுகின்றன. கணிமேதாவி யாரின் புலமை நெஞ்சம் குறட்கடலில் திளைத்தாடிய தீஞ்சுவை நெஞ்சமென்பதை யறிந்துவக்கிறோம்.

கருத்துக்களையும் கருக்களையும் ஒன்றினின்று பிறிதொன் றில் எடுத்தாளுதலை, "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும், பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்" — என்னும் இலக்கண நூற்பா உடன்படுகிறது. கருத்தும், உணர் வும் எடுத்தாளும் போதும் தம் எண்ணமும் கற்பனையும் தழுவிப் புதுமை பூக்க ஆளுதலே சீரியதாம். அவ்வாறு கணிமேதாவியார் தம் புலமைச் சிறப்பால் குறளழகை மேலும் அழகுறுத்தியமை நாம் எண்ணற்குரியதாம்.

பண்டைக் கருத்துக்களும் நல்லற நல்லுணர்வுகளும் என்றும் நன்மை நல்குபவையாதலின், அவையிற்றை நின்று நிலவச் செய்தல் சான்றோர் கடனாகும். அவ்வாறு நற்கொள்கை களை அழியவிட்டால் நம்மினமே அழியும். விளம்பிநாகனார் நான்மணிக்கடிகையில் இவ்வுண்மையை, "குலந்தீது கொள்கை யழிந்தக் கடை" (நான்மணி. 95) என்றபாடலடியால் உணர்த்து கிறார். எனவே தமிழினம் தீதின்றி ஓங்கி நலனுற வேண்டுமெனில் பண்டை நற்கொள்கைகளைப் போற்றி ஏற்றொழுக வேண்டும்.

## கற்பனைவளம்

இவ்வுலகில் எவ்வளவு ஆற்றல் இல்லாத எளியோருக்கும் இரக்கமும் அன்பும் காட்டி யுதவுபவர் ஒருவரிருவரேனும் திண் ணமாக இருப்பதியல்பே. ஒருவரின் துன்பத்தைப் பார்த்து அறிவில்

லாத வலிய நெஞ்சினர் எள்ளிச் சிரிப்பர். ஆயின் நல்லவர்கள் அன்னார் துன்பங்கண்டு அகங்குழைந்து இரக்கங்கொண்டு உருகுவர். உலகில் இவ்வாறு இருவேறு பண்புடையோரை நாம் வாழ்க்கையில் வைகலும் காண்கிறோம்.

ஒரு தலைவி கணவனைப் பிரிந்திருந்தாள். தாங்கமுடியாத பிரிவுத் துன்பத்தால் தலை சாய்த்து அமர்ந்து துடித்துக்கொண்டிருந்தாள். அவள் வீட்டுத் தோட்டத்தில் 'தளவம்' என்று வழங்கும் செம்முல்லைச் செடிகள் இருந்தன. கார்காலம் ஆகையால் அவை பூத்திருந்தன. அப்பூக்கள் இதழ் விரித்து மலர்ந்து சிரிப்பது, தலைவியின் துன்பத்தைப் பார்த்து எள்ளிச் சிரிப்பதாகத் தலைவிக்குத் தோன்றியது.

தலைவியை இவ்வாறு இகழ்ந்து சிரிக்கும் மலரின் துன்புறுத்தலை நீக்கக்கூடிய தலைவனோ, அவள் துன்பத்தைத் தற்போது நீக்கமுடியாத அவ்வளவு தொலைவில் இருந்தான்.

தலைவியின் இரங்கத்தக்க நிலையை ஊரையடுத்த மலைகள் பார்த்தன. செம்முல்லைப் பூக்களின் சிறுமைச் செயலையும் பார்த்தன. பெருந்தன்மையும் இரக்கமும் உள்ள மலைகள் தலைவியின் துன்பத்திற்காக மனமுருகிக் கண்ணீர் சிந்தின. அக்கண்ணீர் மழைநீரால் விளையும் அருவியாக வழிந்தது! எப்போதும் பெரியோர்களின் பண்பும் பெருமைக்குரிய நற்பண்பாகவே இருக்கும் என்பது இதனால் நன்கு புலனாகிறது.

கார்காலத்தில் செம்முல்லை பூப்பதும், மலையில் மழைநீர் அருவியாக வீழ்வதும் இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி. இதனிடையே மக்களியல்பை ஊடுருவ வைத்து, அரிய பண்போவியப் பாடலைக் கணிமேதாவியார் படைத்தருளியுள்ளார்.

"பெரியார் பெருமை பெரிதே யிடர்க்காண்
அரியார் எளியர்என்று ஆற்றுப்—பரிவாய்த்
தலையழுங்கத் தண்தளவம் தான்நகக் கண்டுஆற்று
மலையழுத சால மருண்டு" (தி. நா; 110)

கற்பனையியல்பு பண்டைப் புலவரிடம் எவ்வளவு சிறந்திருந்தது என்பதற்கு இப்பாடலும், வேறு சிலவும் நல்ல சான்று

களாகும். இயற்கையின் சிறு அசைவுக்கும் ஆழ்ந்த நுண்பொருள் காண்பது அறிஞரியல்பு. அதற்குத்தான் கற்பனை பயன்பட வேண்டும். இந்நெறியில்தான் கற்பனையைத் தமிழ்ச் சான்றோர் பயன்படுத்தினர். மிகைக் கற்பனை மாந்தரைப் படைத்து ஆட விடுவது இலக்கியச் செப்படியாட்டமே தவிர நுண்புலமைத் திறமோ உயர்கலை யாற்றலோ சான்றதன்று. கற்பனை அறிவு வழிப்பட்டாலும் பயனும் பண்பும் சான்றதாக இருக்கவேண்டும் என்ற பழந்தமிழ் மரபினை இக்காலத்தறிஞரும் போற்றி ஏற்றொழுகுவது நல்லது.

மிகைக் கற்பனையில் ஒருவகைச் சுவை உண்டு என்பதை உடன்படுகிறேன். ஆயின், அதனுல் பெரும் பயன் விளையவேண்டும். மிகைக் கற்பனையை மெய்யென்று நம்புமாறு செய்வதே பகுத்தறிவுக்கும் புலமையறத்துக்கும் மாறுபட்டதாகும் என்பதே என் கொள்கையாம்.

தாயன்புக்கு நிகரான அன்பு வேறில்லை. அதிலும் பலகாலம் பிள்ளையை வளர்ப்பவளின் பரிவு தனியாழமும் அழுத்தமும் உடையது. பண்டைக் காலத்தில் செவிலித்தாயர் தமிழர் வீடுகளில் அமைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாகப் பெண் மகவை வளர்ப்பதில் செவிலித்தாயரின் தொண்டு மிகமிகக் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாக விளங்கியது.

பெண்ணைப் பெற்றவளைவிட அவளை வளர்த்த செவிலியே அம்மகளிடம் பேரன்பும் பேரீடுபாடும் உடையவளாக விளங்கினுள். இந்நிலையை விளக்கும் இலக்கியச் சான்றுகள் தமிழிலக்கியத்தில் பலவாம்.

ஒரு செவிலித்தாய் உயிரினும்மேலாக அன்பு செலுத்தி அம்மகளை வளர்த்துவந்தாள். அம்மகள் தன் காதலனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள். மகள் காதலனோடு போய்விட்ட செய்தியை அறிந்த செவிலித்தாய் மிகமிகத் துன்பமுற்றுள். மகளின் பிரிவைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை அவளால். ஆகவே மகளைத் தேடி அழைத்து வந்துவிட வேண்டும் என்ற அன்புத் துடிப்போடு வீட்டை விட்டுக் கிளம்பினுள் செவிலி. செவிலி காட்டுவழியை அணுகினுள். அங்கே பெரிய குரவு என்ற

மரம் செழித்து வளர்ந்திருந்தது. அதனுடைய கிளைகளில் எல்லாம் நிறைய பாவைப்போன்றகாய்கள் காய்த்திருந்தன. அக்காய்களுக்கு மிக அணுக்கமாகக் கோங்க மரங்களில் பெரிய முலை போன்ற உருவினையுடைய கோங்கமலர்கள் பூத்திருந்தன.

இக்காட்சியைக் கண்ட செவிலிக்கு அக்காட்சியிலும் தாய்மை வாழ்வும் தாய்மை அடைவுமே தோன்றியது. தன்னுள்ளத்தில் உள்ளதைத் தானே புறத்திலும் காணமுடியும்!

உடனே செவிலிக்குத் தன்மகள் இவ்வழியாகத்தானே போயிருப்பாள் என்பது நினைவுக்குவருகிறது. இப்பரந்தகுரவமர நிழலில் அவள் சிறிது தங்கி இளைப்பாறியிருக்கலாம்; அப்போது அவள் பேசிய பேச்சைக்கூட இம்மரம் கேட்டிருக்கும்; அவள் பிறகு காதலனோடு இணையாகச் சென்ற வழியையும் இக்குரவ மரம்பார்த்திருக்கும் என எண்ணினாள். உடனே செவிலி அக் குரவ மரத்தோடு பேச முற்பட்டாள். அவள் என்ன பேசினாள்? கேட்போம்:

"பெரிய குரவ மரமே! நீ பாவை போன்ற காய்களைக் காய்த்திருக்கிறாய். ஆனால் தாய்போல உள்ளம் குழைந்து தாழ்ந்து பாலூட்டுவது போல முலைபோன்ற கோங்க மலர்களைக் கொண்டிருக்கிறாய்! என்னால் பெற்றெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பெண் உன்னிடம் சொன்ன பேச்சின் பொருளை நீ எனக்கு எடுத்துக்கூற முடியாது. ஆனாலும்கூரிய பற்களையுடைய என் மகள் தலைவனோடு சென்ற வழியையேனும் நீ மனமிரங்கிமுன்வந்து "இதுதான் உன் மகள் போன வழி" யென்று காட்டு. அது போதும்."

குரவ மரம் விடைகூறியிருக்காது. நமக்குத் தெரியும். செவிலியின் உள்ளம் பேரன்பால் துடிக்கும் உள்ளம். அம்மரம் விடை கூறுமா என ஆராயாத நிலையில் மரத்தோடு பேசிய உணர்ச்சி மிக்க நிலையை அழகோவியமாகத் தீட்டியுள்ளார் பாவலர்.

'குரவ மரம் தானே பாலூட்டி மகளை வளர்க்காதது. ஆகவே தன் மகளின் மழலை மொழி அவளுக்குப் (மரத்துக்கு) புரிந்திருக்காது' என்ற நுண் கருத்தமையப் பாடலை அமைத்த திறன் பாராட்டுக்குரியது.

"தான்தாய்ஆக் கோங்கம் தளர்ந்து முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை யிருங்குரவே!—ஈன்றாள்
மொழிகாட்டாய் ஆயினும் முள்எயிற்றாள் சென்ற
வழிகாட்டாய் ஈதுஎன்று வந்து!" (தி. நூ: 65)

கோங்கமரம் போலச் செவிலி தானே தாயாகி மகளை வளர்த்தமையும், உண்மையில் மகளைப்பெற்ற அன்னை குரவு மரம் போன்றும் இருக்கும் நுட்பத்தையும் நாம் உய்த்துணர முடிகிறது.

கோங்க மரமும் குரவ மரமும் புலவர் புலமையில் தாய்மைக் காட்சியாக விரிந்து வாழ்வடைவுண்மைகளை விளக்குவது வியப்பிற்குரியதல்லவா!

அழகை விளக்குவதற்கு அழகிய கற்பனையாற்றலைப் புலவர்கள் பயன்படுத்தும் புலமையழகை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

அவள் தினைப்புனம் காவல் செய்ய வந்திருந்தாள். தற்செயலாக அவளை அங்கே அவன் கண்டான்; காதல் கொண்டான். அவளோ பேரழகுப் பிழம்பு! அவன் கருத்திழந்ததில் வியப்பில்லை. அவள் நினைவன்றி வேறு எண்ணமின்றித் துன்புற்றான் தலைவன். அப்போது அவன் அருமை நண்பன் வந்தான். தலைவனின் துன்பத்தைக் கண்டான்.

"தலைவ, உனக்கு நேர்ந்த இடுக்கண் என்ன? யாரால் நீ இவ்வாறு துன்பப்படுகிறாய்?" எனப் பாங்கன் வினவினான்.

தலைவன் சிறந்த புலமையுடையவன். அவனுணர்வில் அழகு குடி கொண்டிருக்கிறது. ஆகவே அழகு வடிவான விடை கூறுகிறான்.

"நண்பா, முழு நிலாவினுள் இரண்டு விற்களைப் புருவங்களாக வரைந்து, மற்றவர்களுக்கு ஆவல் என்ற துன்பத்தை உண்டாக்குமென்பதை எண்ணிப் பார்க்காமல், இரண்டு வேல்களைப் போன்று இரு கண்களை அந்த விற்களுக்குக் கீழே தக்க இடத்தில் பொறுத்தமாக எழுதி வைத்தது போன்ற அழகிய

முகத்தையுடையவள் அவள். அவள் குறிஞ்சி நிலத்து மங்கை. ஆகவே அவள் உறவினர்கள் தங்களுடன் உள்ள ஓரிளம் பெண் தானே என்று எளிதாக அவளையும் மதித்து, இவ்விடத்தில், பூக்கள் பொலியும் கூந்தலுடையவளான அப்பேரழகியைத் திணைப்புனத்தைக் காவல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறாள். அவர்கள் சிறிதும் அறிவில்லாதவர்களேயாவர். என் மனத்தில் அவள் புகுந்து காவல் செய்யும்படி செய்துவிட்டார்கள் அவர்கள்! தினைக் காவலுக்கு அனுப்புவது போலக் காட்டி, என் மனத்துக்குக் காவல் வைத்து விட்டார்களே!''

நிலவில் வில்லும் வேலும் எழுதிப் பெண்முகமாக்கியதாகக் கூறும் கற்பனைத் திறம் கணிமேதாவியாரின் கற்பனையாற்றலின் முகட்டை நமக்குக் காட்டுகிறது. இக்கற்பனையைப் பிற்காலப் புலவோர் பலர் தம் பாக்களில் நிறையப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் நாம் அறியவேண்டும்:

"திங்களுள் வில்லெழுதித் தேராது வேல்விலக்கித்
தங்களுள் ளாள்என்னுந் தாழ்விஞல்-இங்கண்
புனங்காக்க வைத்தார்போற் பூங்குழலைப் போந்துஎன்
மனங்காக்க வைத்தார் மருண்டு" (தி. நூ: 30)

இதேபாடலை யொத்த மற்றொரு கற்பனையை முப்பத்துநான்காம் பாடலில் கணிமேதாவியார் அருளியிருக்கிறார்.

'நெய்தல் நிலத்தில் கடற்கரையில் சோலைகள் நிறைந்துள்ளன. குளிர்ந்தஅக்கடற்கரைப்பரப்பில்'கழி' என்னும் நீர் நிலைகள் உள்ளன. அதிலே பூத்த தாமரைப்பூ அழகான முகமாகவும், குளிர்ச்சி வாய்ந்த இலைகளையுடைய ஈரமான பெரிய நீல மலர்கள் அழகுள்ள விரும்பத்தக்க கண்களாகவும் கொண்டுள்ள கடற்கழியினை இரவு உறங்கச்செய்யும்' எனப் பாடுகிறார்.

"தாமரை தான் முகமாத் தண் அடை ஈர்மாநீலம்
காமர்கண் ணாகக் கழி துயிற்றுங்—காமருசீர்த்
தண்பரப்ப! பாய்இருள் நீவரின் தாழ்கோதையாள்
கண்பரப்பக் காணீர் கசிந்து." (தி. நூ: 34)

நீர் நிலையின் அழகையும் அதில் பூத்த பூக்களின் எழிலையும்

மக்களழகுருவோடு பொருத்தி இலக்கிய நயந்தோன்றப் புலவர் பாடிய பாவின் சிறப்புச் சுவைத்தற்குரியதாம்.

இயற்கைத் தன்மை சான்ற அழகிய கற்பனை நயம் அமைந்த கணிமேதாவியாரின் பாக்களுள் ஒன்றிரண்டை மட்டுமே இவண் சுவைத்தோம்.

கற்பனை நம்முள்ளத்தில் அழகுணர்வையும், விரிந்த உணர்ச்சியுரிமையும் உண்டாக்கி வளர்க்கிறது: கணிமேதாவியாரின் கற்பனை நயமும் நம்முள்ளத்தில் அழகுணர்ச்சியை மலர்த்திப் புலமை நறவினையூட்டுகிறது.

## யாப்புநலன்

தமிழிலக்கியத்தில் வெண்பாயாப்புக்கள் தனித்தகுதிசான்ற சிறப்புடையன: ஓரளவு கட்டுப்பாட்டோடு கூடியவை யாயினும் புலவனின் எண்ணத்தை — உணர்வை — ஆழ்ந்த கருத்தாற்றலைத் திட்பநுட்பத்தோடும் ஆழஅழுத்தத்தோடும் விரிந்த கற்பனை வளத்தோடும் வெளியிட வெண்பா யாப்புக்களே சீரியதாகும்:

தமிழின் ஈடிணையற்ற இலக்கிய நூலும், உலகப் பெருஞ்சீர் நூல்களுள் முதன்மையும் தலைமையுஞ் சான்ற உலக இலக்கிய மேதை நூலுமான திருக்குறள் கூட வெண்பா யாப்பின்பாற்பட்டதே. அதுவுமன்றி, வெண்பா யாப்பில்தான் புலவனின் புலமைத் திறமனைத்தும் காட்டுதற்கு ஒரு பெரு வாய்ப்பமைகிறது. சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் என்ற அழகுக்கு இவ் வாய்ப்பு நன்கு உதவுகிறது.

கணிமேதாவியார் வெண்பா யாப்பைத் தேர்ந்தெடுத்தமை அவர் புலமையாற்றலை நன்கு பயன்படுத்த அது கருவியாயிருந் தமையாலேயே. இவர் வெண்பாக்கள் கடுமையும், எளிமையும் கலந்தவையாக விளங்குகின்றன. கருத்துக்கேற்ப யாப்பைக் கையாளுமியல்புடையவர் இவர் என்பதை இதனல் நாம் அறியலாம். தெளிந்த நீரோட்டம் போலவும் இவர் பாவியற்றியுள்ளார். சொற்சிலம்பக்கலையைப் புகுத்தியும் வெண்பா வடித்துள்ளார்.

இவர் மோனைகள் அமைய ஒவ்வோரடியையும் அமைத்த

ஆற்றல் பாராட்டத்தக்கது. 'மோனைமுத்தமிழ்' என்ற சிறப்பை நன்கு போற்றியுணர்ந்த புலவர் இவர்!

இவர் வெண்பாக்கள் யாவும் ஒரே எதுகை கொண்டு நடவாமல் இருவேறு எதுகைகளாலேயே அமைந்துள்ளன. 88,106-ஆம் எண்ணுள்ள இருவெண்பாக்கள் மட்டும் பாமுழுமையும் ஒரே எதுகையாக ஒருவகையில் அமைந்துள்ளனவாக உள்ளன. அவையும் இனவெதுகைகளாகவே உள்ளன:

"அல்லாத வென்னையுந் தீரமற் றையன்மார்
பொல்லாது என்பதும் நீபொருந்தாய்—எல்லார்க்கும்
வல்லி ஒழியின் வகைமைநீள் வாட்கண்ணாய்!
புல்லி ஒழிவான் புலந்து." (தி. நூ: 88)

"என்னரே ஏற்ற துணைப்பிரிந்தார் ஆற்றுஎன்பார்
அன்னரே யாவர் அவர்க்கு—முன்னரே
வந்துஆரம் தேம்கா வருமுல்லை சேர்தீந்தேன்
கந்தாரம் பாடும் களித்து" (தி. நூ: 106)

வேறுபட்ட எதுகைகளை (முன்னிரண்டடி, பின்னிரண்டடிகளில் எதுகை வேறுபட்டமைவது) ஆள்வதில் கணிமேதாவியார் விருப்பமுடையவர் என அறியலாம். கருத்தோட்டத்தை எதுகை தடைசெய்யககூடாதென்பதற்காக இவ்யாப்பியலை அவர் மேற்கொண்டார் என்பது தெளிவாம்.

இவர் முரண்தொடையமைப்பதில் ஆர்வங்காட்டியுள்ளார்.

'கருவிரற் செம்முக வெண்பல்சூல் மந்தி
பருவிரலாற் பைஞ்சுனை நீர்தூஉய்'—(10)

'செவ்வாய்க் கரியகண் சிறினூற் கேளாதும்' (73)

'ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யீந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ—முந்துருவின்
ஒன்ருய் யுருமுடைத்தாய்ப் பெய்வான்போற் பூக்கென்று
கொன்ருய்! கொன்ருயெற் குழைத்து."--(104)

'கருங்கோட்டுச் செங்கண் எருமை கழனி
யிருங்கோட்டு மென்கரும்பு சாடி'—(137)
'செங்கண் கருங்கோட்டு எருமை சிறுகனையால்' (147)

### சொல்நயம்

யாப்பின் வெற்றிக்கு அடிப்படை சொல்லாட்சித் திறனே. வெல்லுஞ் சொற்கள், ஆற்றலோடு தக்கமுறையில் பாவில் இடம்பெறுதல் சிரிய புலமைத் திருப்பணியாம். ஒரு புலவனின் வெற்றி இலக்கியப் படைப்புக்கு இன்றியமையாது இருக்க வேண்டுந் தகுதி சொல்லாட்சி வெற்றியே. கணிமேதாவியார் மிக அருமையாகச் சொல்லாட்சி செய்திருக்கிறார். தன்னேரில்லாத் தனித் தமிழ்ச் சொல்வளத்தை இவர் படைப்பு அருமையாக விளக்குகிறது.

ஒரு தலைவன், தலைவியைத் தனியே விடுத்துப் பொருளீட்டுதற்காக வெளிநாடு சென்றான். அவன் திரும்பி வரவேண்டிய பருவம் வந்துவிட்டது. தலைவன் வரவில்லை. அதனால் துன்புற்ற தலைவி, தன் துயரைத் தோழிக்குச் சொல்கிறாள்:

"தோழி, என்னுள்ளத்துத் துன்பம் மிகவும் பெரியதாகும். நம் தலைவர் வெறுக்கைக்குச் சென்றார். வேனிற் பருவம் வந்துவிட்டது அவரை இன்னுங் காணேம். இந்நிலையில் நான் எவ்வாறு அவர் பிரிவைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்?"

வெறுக்கை என்றால் செல்வம் என்று ஒரு பொருள். இன்னொரு பொருள்: தலைவியை வெறுக்கும் பொருட்டுச் சென்றார் என்பதாம். இவ்வாறு இருபொருட் சொன்னயம் அமையத் தன் பாடலில் சொல்லாட்சி செய்த பாவேந்தர் கணிமேதாவியாரை எத்துணையளவு பாராட்டினாலும் பொருந்தும்.

"வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய்! தோன்றார்
பொறுக்கவென் றால்பொறுக்கல் ஆமோ?-வொறுப்பபோற்
பொன்னுள் உறுபவளம் போன்ற புணர்முருக்கம்
என்உள் உறுநோய் பெரிது?" (தி. நூ. 67)

ஒரே பொருள் நம் தமிழ்நாட்டுத் தாயரிடம் பலப்பல உருவும், சுவையும், பயனும், நயமும் பயக்கும் உண்மையை நாம் அறிவோம். அரிசி ஒரே முதற்பொருள். அதிலிருந்து இட்டளி, தோசை, ஊத்தப்பம், அப்பம், பிட்டு, சோறு, (சோற்றினம்தான் எத்தனை! புளியஞ்சோறு, எலுமிச்சைச்சோறு, அக்காரவடிசில், எள்சோறு, மிளகுச்சோறு, மோர்ச்சோறு, சோற்றவியல், தாளித்த பழையமுது முதலியவை) கொழுக்கட்டை, அரிசியடை, பொங்கல் என எத்தனையோ பலகாரங்கள் செய்கின்றனர் மகளிர்.

அதே போலக் கணிமேதாவியார் வண்டினம் செய்யாத வைகளைக் காட்டி ஒரு புதுமைப் படைப்பை நல்கியுள்ளார்.

வண்டுக்கூட்டம் விரும்பிக்கொள்ளாதது ஆம்பல்* என்ற பெயருடைய புல்லாங்குழல், ஒழுங்காக அமைந்த இதழ்களால் வண்டினம் வாய் வைக்க விரும்பாத (கதிரவன் சாயுங்காலமான) மாலை, ஆக இரண்டும்; வண்டுக்கூட்டம் பொருந்த விரும்பாத நெட்டிப்பூக்கள் முதலிய பொருட்களால் செய்த மாலைகளால் அழகு செய்யப்பட்ட தேரைக் கொண்டவனாகிய தலைவன், தலைவி யிடம் வராத நாட்களில் தலைவியைத் துன்புறுத்தும்' என்று தலைவி தோழியிடம் கூறினாள்:

"வண்டினம் வெளவாத ஆம்பலும் வார்இதழான்
வண்டினம் வாய்வீழா மாலையும்—வண்டினம்
ஆராத பூந்தார் அணிதேரான் தான்போத
வாராத நாளே வரும்" (தி. நூ: 101)

இப்பாடலில் 'வண்டினம் வெளவாத, வண்டினம் வாய்வீழா, வண்டினம் ஆராத' என்று சொல்லாட்சித் திறனோடு பொருள் திறனும் பொருந்தப்பாடிய மேதாவியார் புலமை மேன்மை சான்றதே.

---

* ஆம்பற் பூவின் வடிவில் 'அணைப்பூண்' செய்து அமைத் திருக்கும் புல்லாங்குழல். இதற்கு 'ஆம்பற்குழல்' என்று பெயர். இதனை வண்டு மொய்க்காது.

விடுகதைகளில் சொற்களை ஆள்வது போலக் கணிமேதாவி யார் ஒரு பாவில் சொல்லாட்சி செய்துள்ளார்.

மாறாத புகழ் மிக்க பாண்டியனின் மதுரைமா நகரைப் போன்ற அழகுடையவள் தலைவி. சமைத்தற்குப் பயன்படாத கீரை (அடகு) என்னும் வேறொரு பொருளையுடைய பெண்கள் விளையாடும் 'விளையாட்டுப் பண்ணையிலும் அவளைக் கண்டே னில்லை. பூங்கொம்பு போன்ற சிற்றிடை யுடைய தலைவியின் கூந்தல் மயிர், போர்க்களத்தில் பின்வாங்காத, இரும்புக்கொல் தொழிலால் செய்யப்பட்ட வேற்படையைக் கொண்ட மன்னர் அணியும் அணிகலமான 'முடி'யாக ஒன்றுகூடி நீண்டு வளர்ந்தன வோ? (தலைவி விளையாட்டுப் பெண்ணாக இருந்து ஆடுமிடத்தில் பழகியகாலை தலைவன் அவளைக் கண்டு காதல் கொண்டான். பருவமுற்றதால் அவள் வீட்டில் காவலாக அமைக்கப் பெற்றாள். அவளைத் தலைவனால் பார்க்கமுடியவில்லை. சிறுமியாக ஆடும்போது அவள் கூந்தல் சிறிதாக—வளராததாக—இருந்தது. இப்போது 'முடியாக' (மன்னர்கலன்) நீண்டுவளர்ந்து அவள் 'பெரியவளாகி' விட்டதை உணர்த்தியதோ? என்ற குறிப்பு மொழியாகப் பாடலை அமைத்துள்ளார்:)

"கோடாப் புகழ்மாறன் கூடல் அனையாளை
ஆடா அடகினுங் காணேன்போர்—வாடாக்
கருங்கொல் வேல்மன்னர் கலம்புக்க கொல்லோ
மருங்குல் கொம்(பு)அன்னாள் மயிர்!" (தி. நூ: 4)

இவ்வாறு சொல்நயம் கமழப்பல பாக்களை யாத்துள்ளார் புலமைச்செல்வர் கணிமேதாவியார்.

நம் நிழலை மறைக்க வேண்டுமாயின், பிறிதொரு நிழலில் சென்று நிற்கவேண்டும். நம் வாழ்வின் குறைகள் துன்பங்கள் கேடுகள் ஆகியவற்றை நீக்க, மறக்கவேண்டுமாயின், இலக்கிய நிழலில் (கலை நிழலில்) புகலடைந்து நிலைபெறவேண்டும்.

பண்டைத் தண்டமிழ் இலக்கியங்களின் உண்மை எழி லும், உணர்வெழுச்சித் தூய்மையும், நுண்மைக் கலைநயமும், புலமைப்பீடும், இசை கனிந்த மொழி நடை மாண்பும், ஒண்மைப்

பொருட் செறிவும், ஓங்குபுகழ் மேதைமையும் சாற்றருஞ் சிறப்புடையனவாம்.

பிற்றைத் திறனுய்வு வரையறைகளைக் கொண்டு அளக்க முடியாத பழமைச் செல்வங்கள் அகத்துறைப்பாக்கள்; அவை தமிழுக்கே உரிய இயல்புடைய இலக்கிய அமிழ்தங்கள். நெஞ்சம் உள்ளவரை, உயிரோட்டத்தின் உணர்வுகள் உள்ளவரை, உலகியலில் இல்லற வாழ்வும் வாழும் வரை தாம் 'வெற்றி வாழ்வு' வாழக்கூடிய அகனைந்திணைப் பாக்கள்; தமிழர் — உலகோர் — அறிவுக்கும் உணர்வுக்கும் – சுவைப் புலனுக்கும் – வாழ்வுக்கும் விருந்தாகி, மருந்தாகி நற்றொண்டாற்றும். அத்தகு மேதைப் படைப்புக்களுள் திணைமாலை நூற்றைம்பது ஒப்பற்ற இடம் பெற்றுத் திகழுமியல்பினதாம். அதனை யாத்தளித்த மேதாவியார் நம் அகமலி நன்றிக்குரியவராவார்.

# துறைமங்கலம் - சிவப்பிரகாச அடிகள்.

—*—

பேராசிரியர். திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம்.

### புராணங்கள்

சிவப்பிரகாச அடிகள் சிறந்த புராணிகர் என்பதை அவருடைய திருக்கூவப்புராணம், சீகாளத்திப்புராணம் ஆகியவை அறிவிக்கும். புராணம் பாடுவோர் தம் புராணங்களில் ஒரு பொருளைப் பற்றி ஒருவர் கூறிச் செல்லும் கதையினைச் சிற்சில விடங்களில் மாற்றியும் கூட்டியும் விடுத்தும் பாடுவது இயற்கை. இம்முறையினைக் கச்சியப்ப சிவாச்சாரியார் போன்றவரிடத்தில் காணலாம். வான்மீக இராமாயணத்திலும் வேறாகக் கம்பர் பல விடங்களில் திருத்திப் பாடிக்கொண்டதையும் நாம் அறிவம். நம்மடிகளும் தம்புராணங்களில் சிற்சில மாறுதல்களுடன் கதைகளைப் பாடியுள்ளார்கள்.

### 1. சீகாளத்திப் புராணம்—கண்ணப்பச் சருக்கம்.

பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கும் சீகாளத்திப் புராணக் கண்ணப்பச் சருக்கத்து வரலாற்றுக்கும் உள்ள வேறுபாடுகளை மட்டும் பார்க்கலாம்.

1. பெரிய புராணத்தில் கண்ணப்பர் பலதடவை வேட்டைக்குச் சென்றதாகக் கூறப்படவில்லை. முதல் வேட்டையிலேயே குடுமித் தேவரைக் கண்டதாகவும், அவரிடத்திலேயே தங்கியதாகவும், அதில் கூறப்பட்டுள்ளது. சீகாளத்திப் புராணக் கண்ணப்பச் சருக்கத்தில் கன்னி வேட்டைக்காகக் காடு சென்றதாகவும் திரும்பி வந்ததாகவும் பின்னரும் பலமுறை வேட்டைமேற் சென்று திரும்பியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

2. ஒரு...ள் வேட்டைக்குச் சென்ற திண்ணனார் வேடர்களை நீங்கித் தன...த்து உலாவி இளைத்து ஓர் மரநிழலில் துயின்ற

னர். அவ்வேளையில் சிவபெருமான் திருவெண்ணீறணிந்து புலித்தோலுடுத்துச் சடைமுடி கோலத்துடன் கனவில் தோன்றி "மைந்தா! இம்மலையில் பொன்முகரி யாற்றங்கரையில் கல்லால மரத்தடியில் ஒரு சிவலிங்கம் உண்டு. அது துன்பம் அனைத்தையும் அழித்துப் பேரின்பம் அளிக்கும். நீ சென்று வணங்குவாயாக" என்றுரைத்து மறைந்தருளினர். உடனே கண்விழித்த திண்ணனார் வியப்புற்றவராய்த் திக்கெலாம் நோக்கினர். அப்போது ஒரு பன்றி வேடரது வேட்டைக் கூக்குரலால் எழுந்து கட்டிய வலையை அறுத்துக்கொண்டு மலைப் பக்கமாக விரைந்தோடியது. அது கண்ட திண்ணனார் துரத்திச் சென்றனர். ஆலமரத்தடியிலே சிவலிங்கத்தருகே சென்றதும் பன்றி மறைந்தது. அதனைத் தேடிய காலையில் திண்ணனார் எதிரில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டார்."

இவ்வரலாறு பெரியபுராணத்துட் காணப்படாதது.

3. நாணன் காடன் என்ற நண்பர்கள் சீகாளத்திப் புராணத்துட் காணப்படவில்லை.

4. முதல் நாள் வேட்டையிலேயே பன்றியைத் துரத்திச் சென்றதாகக் கூறும் பெரியபுராணம். திண்ணனார் கனவு கண்டு விழிக்கும் போது பன்றியோடத் துரத்திச் சென்றதாகச் சீகாளத்திப் புராணம் கூறும்.

5. நாணன் காடன் ஆகியவர்களை விட்டமையால் இவர்கள் பேசியன யாவும் சீகாளத்திப் புராணத்தில் காண்டற்கில்லை. தீயையும் திண்ணனாரே கடைந்துகொண்டார்.

இவ்வாறு அடிகள் பெரிய புராணத்துக்கு மாறுபடக் கண்ணப்பர் வரலாற்றைக் கூறியிருப்பினும் பெரும்பாலும் சேக்கிழாரைத் தழுவியே சென்றிருக்கிறார். சேக்கிழார் கருத்துகளையும் உவமைகளையும் அப்படியே பற்பல விடங்களில் ஆண்டுள்ளார்.

"திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருட்டிரு நோக்கம் எய்தத்

தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல்
பொருவிலன் புருவ மானார்''
(பெரிய. கண். 104)

என்றார் சேக்கிழார். இவர் வாக்குக்கு உரை கூறியது போல அடிகள் கூறியது காணலாம்.

''காண்டலும் கடவு ளார்தம் கருணைநோக் கினிது பெற்று
மாண்டகும் இரதம் தோய்ந்த வல்லிரும் புருவ மாறி
ஈண்டொளி கெழுபொன் னுவ தென்னமுற் குணங்கள் மாறி
ஆண்டகை யிறைவன் தன்பால் அன்பொரு வடவ மானான்.
(ஸ்ரீகா. கண். 95)

இப்பாடலில் இவர், ''இரதந் தோய்ந்த வல்லிரும்பு உருவ மாறி ஈண்டொளி கெழு பொன் ஆவதென்ன'' என்ற தொடர் அமைத்தது சேக்கிழாரின் வாக்கைக் கொண்டேயாம்.

''முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ''
(பெரிய. கண். 154)

இறைவனுக்கு இறைச்சியுணவு கொண்டு வரவேண்டும் என்றுஎண்ணிப் பிரியக்கருதிய திண்ணனார் நிலையைச் சேக்கிழார், ''கன்றகல் புனிற்றாப் போல'' (162) என்றார். நம் அடிகளும், ''அன்றகல் புனிற்றாப்போல அடிக்கடித் திரும்பி நின்றே'' (106) என்றார். இவ்வாறு கருத்துகளை ஆண்டு சேக்கிழார் பெருமானுக்கு மதிப்புதந்தார் அடிகள்.

## 2. நக்கீரச் சருக்கம்.

நக்கீரர் வரலாற்றைப் பற்றிக் கூறிய புராணங்கள் ஐந்து.

1. ஸ்ரீகாளத்திப் புராணம்
2: பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்

3· நம்பி திருவிளையாடற் புராணம்

4: திருப்பரங்கிரிப் புராணம்

5. வடமொழியில் ஆலஸ்ய மான்மியம்

நக்கீரர் வரலாறுவிரிந்தது. ஆதலின் எழுதாதுவிட்டு வேறு பாடுகளை மட்டும் எழுதுகின்றோம்.

1. சீகாளத்திப் புராணத்திற் கூறப்பட்ட வற்கடம் மற்றையப் புராணங்களில் நக்கீரர் வரலாற்றை யொட்டிக் கூறப் படவில்லை.

2. தருமியென்பான் வற்கடத்திற் கஞ்சி வேறுநாடு செல்ல எண்ணி யிறைவனிடம் முறையிட்டதாகவும் பின்னர் இறைவன் அவன் துயர் போக்கி "கொங்குதேர் வாழ்க்கை" பாடிக் கொடுத்த தாகவும் சீகாளத்திப் புராணம் கூறுகிறது; பரஞ்சோதி திருவிளை யாடலோ வெனில் வற்கடத்தைக் கூருமல் தருமியானவன் இறைவனைப் பூசனைபுரிய விரும்பியதாகவும் அதற்கு அல்லறத் தானுக வேண்டுமாதலின் தான் ஒரு கன்னியை மணக்க வேண் டும் என எண்ணியதாகவும், தான் தாய் தந்தையரை யிழந்த தனியனுதலின் தனக்குப் பொருள் கிடைக்க வழியில்லை என்றும் அதனுல் பாண்டியன் மனக்கருத்தைக் கொண்ட பாடல் ஒன்று இயற்றித்தந்து அவன் அமைத்த பொற்கிழியைப் பெறும்படிச் செய்ய வேண்டும் என்றும் இறைவனிடத்து வேண்டியதாகவும் அதன்பின்னர் இறைவன் "கொங்குதேர் வாழ்க்கை" பாடிக் கொடுத்ததாகவும் கூறுகின்றது.

3. நக்கீரர் இறைவனை நோக்கி நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்ற அளவில் இறைவன் சினந்து."குட்ட நோயுற்று அலைக" என்று சபித்ததாகவும், நக்கீரர் சாப நீக்கம் கேட்கக் கயிலை காணின் நீங்கும் என்றதாகவும் சீகாளத்திப் புராணம் கூறுகின்றது. கயிலை பாதி காளத்தி பாதியந்தாதியைச் சீகாளத்தியில் பாடியதாகவும் அது கூறும். பரஞ்சோதியின் திருவிளையாடற் புராணமோ, நெற்றிக்கண்ணின் வெப்பம் ஆற் ருது நக்கீரர் பொற்ருமரை வாவியில் மூழ்கியதாகவும், புலவராய் வந்த இறையனுர் மறைந்ததாகவும், பிறபுலவர்கள் நக்கீரர் இல் லாது சங்கம்பொலிவற்றமை கண்டு இறைவனைக் குறையிரந்த

தாகவும், இறைவன் உமையம்மையுடன் வெளிப்பட்டுக்கீரனார்க்கு அருள்புரிந்ததாகவும் கீரனார் அவ்விடத்துக் கயிலைபாதி காளத்தி பாதியந்தாதி பாடியதாகவும், உடனே யிறைவன் கீரனாரைக் கரையேற்றியதாகவும், பின்னர்க்கீரனார் கோபப்பிரசாதம், பெருந்தேவபாணி, திருவெழுகூற்றிருக்கை ஆகிய நூல்களைப் பாடியதாகவும் கூறுகின்றது.

4. நம்பி திருவிளையாடற் புராணத்தில் "சொங்குதேர் வாழ்க்கை" என்ற செய்யுளைப் பற்றி இறையனார்க்கும் நக்கீரர்க்கும் வாதம் நிகழ்ந்த விடத்து,

"அங்கங் குலுங்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக்
கீர்கீர் எனவறுக்கும் கீரனோ என்கவியை
ஆராயு முள்ளத் தவன்."

என்று இறையனார் சினந்து கூறியதாகவும், நக்கீரர்,

"சங்கறுப்ப தெங்கள்குலம் சங்கரனார்க் கேதுகுலம்
பங்கமறச் சொன்னாற் பழுதாமே—சங்கை
அரிந்துண்டு வாழ்தும் அரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வ திலம்."

என்று பதில் உரைத்ததாகவும்கூறப்பட்டிருக்கிறது. இறையனார் களவியலுக்குரை கண்ட வரலாறும் இதிற் காணப்படுகின்றது.

5. திருப்பரங்கிரிப் புராணத்தில் திருமுருகாற்றுப் படை பாடிய வரலாறு வேறாகக் காணப்படுகின்றது.

நக்கீரர் கடவுளரிற் சிவபிரானையும் மக்களிற் பாண்டியனையும் தவிர வேறு யாரையும் பாடுவதில்லை யென்றுறுதி கொண்டிருந்தார். இதை எப்படியேனும் போக்கித் தன்னைப் பாடும்படிச் செய்யவேண்டும் என எண்ணிய முருகன், உக்கிரன் அண்டாபரணன் என்பானை அழைத்து, "நக்கீரனை எப்படியேனும் குற்றம் கற்பித்துச் சிறைப்படுத்துக" என ஆணையிட்டனன். நக்கீரர் ஒரு நாள் சரவணப் பொய்கையிற் போந்து சிவபூசை புரியும் போது, அண்டாபரணன், அருகிருந்த அரசமரத்தின் இலையொன்றைக் கிள்ளியிட்டான். அவ்விலையின் ஒரு பகுதி நீரிலும் மற்றொரு

பகுதி நிலத்திலுமாக வீழ்ந்து முறையே மீனும் பறவையுமாகி ஒன்றையொன்றுபற்றியீர்த்தன. அதனைக்கண்டகீரர்இரக்கமுற்று அவற்றை நகத்தாற்பிரித்தனர். பிரிக்கவே அவைகள் உயிர் இழந்தன. உடனே அண்டாபரணன், "முருகக் கடவுளின் பரங்குன்றில் கொலைப்பாவம் புரிந்தனை" எனக்கூறி அவரை எடுத்துச்சென்று மலைக் குகையில் அடைத்தான். நக்கீரர் இது முருகனை வணங்கிப் பாடாத குற்றத்தால் நேர்ந்தது என்றுகொண்டு திருமுருகாற்றுப் படை பாடினர். அதன் ஈற்றில் "கிழவோன்" என முடிந்திருத்தல் கண்டு முருகன் நக்கீரரது கனவில் தோன்றி 'நீ நம்மைக் கிழவன் என்றதால் நாம் கிழவனாகப் பன்னாள் செல்லும்' என்று கூறி மறைந்தருளினார். உடனே நக்கீரர்,

"குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்னுள்ளத் துறை"

என்ற வெண்பாவால் வணங்கினார். இதனுள் "இளையாய்" என்றது கண்டு மகிழ்ந்து வேற்படை விடுத்துக் குகையினைத் திறந்து நக்கீரனாரைச் சிறைவீடு செய்தனன் முருகன்.

இவ்வரலாற்றால் திருமுருகாற்றுப்படை திருப்பரங்குன்றத்திற் செய்யப்பட்டது என்பது பெறப்படும்.

# வீர வள்ளி

—○—

—மதுரைக்குமரன்—

(1) திருமலிந்த ஆப்பிரிக்கா சீரும் பெறவே
திரைகடலே தமதென்றும் ஆங்கில நாட்டில்
திருநாடாம் இந்தியாவின் மக்கள் துணையே
சிறந்ததெனக் கண்டறிந்து வந்தார் இங்கு,
பெருமையெலா முற்றிழந்து வறுமை யுற்றுப்
பெயரளவில் இந்தியராய் அன்று வாழ்ந்த
ஒருசிலரை இன்சொல்லால் இணங்க வைத்தே
ஒப்பந்தக் கூலியெனக் கொண்டே சென்றார்.

(2) உற்றாரைத் தாய்நாட்டை முற்றும் மறந்தே
ஊன்வருந்த உளம்வருந்த உழைத்தே நாளும்
வற்றாத பொருள்தனைவெள் ளையர்க்கே ஈந்தார்
வளமடைவோம் தம்வாழ்வில் என்றே எண்ணி
பெற்றபெருஞ் செல்வத்தால் மதியும் இழந்தே
பேராசை வெள்ளையரும் வஞ்சம் செய்தார்
உற்றதுயர் தாங்காதே உரிமை யற்ற
ஊமைகளாய் அடிமைகளாய் வாழ்ந்தார் நமரே!

(3) வெள்ளையராய்ப் பழுப்பருமாய்க் கரியர் உலகில்
வெவ்வேறு பலவினங்கள் உண்டே என்னின்
எள்ளளவும் அவர்பிறப்பில் பேதம் உண்டோ
ஏனோரைப் படைத்தவனும் ஒருவன் தானே

உள்ளமிலா வெள்ளையரோ உணர்ந்தார் இல்லை
உவகையுடன் நிறவெறியை ஊக்கி வந்தார்
கள்ளமிலா இந்தியர்கள் உற்ற துன்பம்
கண்டிரங்கா மக்களுண்டோ எங்கும் அந்தோ!

(4) இந்தியரின் தவப்புதல்வர் காந்தி என்பார்
இதைக்கேட்டு மனம்வாடி இரக்க முற்றார்
இந்நாட்டில் வழக்குரைக்க இங்கி லாந்தில்
இவர்படித்தார் என்றிடினும் வழக்கு மன்றம்
எந்நாளும் ஏறிலரே பணத்திற் காக
இந்தியர்தம் துன்பத்தைக் கேள்வி யுற்ற
அந்நாளே ஆப்பிரிக்கா செல்வே னென்று
அவர்விரைந்து சென்றதனால் மகாத்மா வானார்.

(5) மாக்களென இந்தியரை மாட்சி இன்றி
மதிகெட்ட வெள்ளையர்கள் எண்ணி மேலும்
ஆக்கமுற வழியதுவே ஆகும் என்றே
ஆள்வரியும் விதித்ததுடன் கூலி யென்றே
நீக்கமற அழைத்தனரே பார தத்தை
நீதிமன்ற வழக்குரைஞர் வணிகச் செல்வர்
ஊக்கமுடன் தொழில்நடத்திக் கப்பல் ஓட்டும்
உயர்ந்தோனும் வெள்ளையர்க்குக் கூலி யேயாம்.

(6) இத்தனையும் போக்கிடவே காந்தி வேண்ட
ஈரமற்ற நெஞ்சினரோ அவர்சொற் கேளார்
சத்தியாக்கிரகவெனப்போர்த் தொடுத்தார்அவரே
சற்றேனும் கேட்டறியாப் புதுமைப் போரே
கத்தியில்லா இரத்தமில்லா அறப்போ ரதனில்
கழியடியும் குண்டடியும் பட்டோர் வீரர்
சித்தமது கலங்காது சிற்றமின் றிச்
சிறிதேனு மச்சமின்றி நிற்றல் வெற்றி.

(7) முன்னின்றார் தளபதியாய்க் காந்தி யாரும்
முதியோரும் இளையோரும் போட்டி யிட்டே
பின்வந்தார் சிறைசென்றார் துன்பம் மூழ்கிப்
பிறந்தவர்தாம் இறப்பதுவும் உறுதி யாகும்
என்றெண்ணித் தன்மானம் காக்க வந்த
எண்ணற்ற தொண்டருளே ஆண்கள் பல்லோர்
பெண்மணிகள் அதுகண்டு பின்செல் லாது
பெரிதுவந்து முன்வந்தார் உயிரும் விடவே.

(8) தெள்ளியராய் இந்நாட்டில் சிறந்து வாழும்
திசையெங்கும் புகழ்பெற்ற தமிழப் பெண்ணும்
**வள்ளி**யெனும் பெயருடையாள் வளர்ந்தாள் அங்கு
வயதிலவள் சிறுமியெனில் வாட்ட மில்லா
உள்ளத்தில் அவளொப்பார் எவரு மில்லை
உத்தமனார் தோற்றுவித்த உரிமைப் போரில்
உள்ளத்தைப் பறிகொடுத்துத் தொண்ட ரானாள்
உளமகிழ்ந்து சிறைசென்றாள் உயிரும் ஈய.

(9) பெண்ணென்றால் இரங்காத பேயு மில்லை
பெண்ணினத்தைத் தாய்க்குலமாய்ப் பேணா ரில்லை
மண்ணாசைப் பேய்கொண்ட வெள்ளை மாக்கள்
மதிகெட்டு நெறிகெட்டு மான மற்றே
எண்ணாத பலகொடுமை இழைக்க நாளும்
எழிலுடம்பில் நோய்பற்ற எவ்வம் உற்றாள்
எண்ணிரண்டு வயதுடைய வள்ளி பின்னர்
எலும்புருவாய் வெளிவந்தாள் ; என்னே! என்னே!

(10) உற்றாரும் உறவினரும் கவலை கொள்ள
உயிருக்குப் போராடிக் கொண்டி ருந்த
வற்றாத ஊக்கமுடன் வள்ளி தன்னை
வாய்மைப்போர் தளபதியார் பார்க்க எண்ணிப்

பெற்றோரில் பன்மடங்கு கவலை கொண்டு
பித்தர்போல் ஓடிவந்தார் வீடு தேடி;
பெற்றபெரும் என்செல்வி வள்ளியைப் போல்
பிறிதெங்குக் காண்பேனென் றேக்க முற்றே.

(11) "என்னருமை வள்ளியம்மா! வாழ வந்த
இந்நாட்டில் அறப்போரில் சேர்ந்த தாலே
இன்னலுற்றே இந்நிலைக்கு வந்து விட்டேன்
என்றெண்ணம் உன்மனத்தில் தோன்றி யுள்ள
தன்றோ? சொல் லுக" வென்றார் காந்தி யாரே
"தயங்காது சிறைசெல்வேன் இன்னும் நானே;
இன்னுயிரி னும்மானம் பெரிதே" என்றாள்
இந்நாட்டுப் பெண்குலத்தின் முத்தாம் வள்ளி.

(12) அம்மொழியைக் கேட்டமகான் தமிழர் உள்ளம்
அங்குகண்டார் 'வெற்றியினி நமதே' என்றார்.
செம்மையுடன் வள்ளியுயிர் காக்க எண்ணிச்
செயத்தக்க மருத்துவங்கள் அனைத்தும் செய்தார்
இம்மையிலே புகழ்நிறுவிச் சென்றாள்; அந்தோ!
இவ்வுலகந் தனைவிட்டே வீரவள்ளி
தம்மாணை வழிநின்றே உயிரை நீத்த
தமியளுக்கோர் நினைவுக்கல் நட்டார் காந்தி!



மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
முன்னாள் செயலாளர்
N. R. கிருட்டிணசாமி அய்யங்கார்
அவர்கள், B. A. B. L.

தோற்றம்: மறைவு:

அக்டோபர் 1886 26—11—66

# உயர்திரு. என். ஆர். கிருட்டிணசாமி அய்யங்கார்

30 ஆண்டுகள் வரை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும், உயர்ந்த தமிழ் மேதையாகவும், சிறந்த வழக்கறிஞராகவும் விளங்கிய என். ஆர். கிருட்டிணசாமி அய்யங்கார் அவர்கள் கி. பி. 1886–ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் தஞ்சை மாவட்டத்திலுள்ள நீடாமங்கலம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் கடைசிக் குழந்தையாக இருந்தமையால் அவருடைய தாய் அரங்கநாயகி அம்மையாரும், தந்தை அரங்கசாமி அய்யங்காரும் மிகுந்த அன்புடனும் ஆர்வத்துடனும் அக்குழந்தையை வளர்த்தனர்.

அக்குழந்தை மிகுந்த துடிப்புடனும் கூர்த்த மதியுடனும் விளங்கியதால் ஒரு தமிழ்ப் பெரியார் அதன்பால் அதிக அன்பு பாராட்டினார். அப்பெரியாரின் உதவியால் 12–ஆம் அகவைக்குள்ளாகவே அக்குழந்தை கம்பராமாயணத்தின் பெரும்பான்மையான பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டது. மேலும், அக்காலத் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து படித்தமையால் தமிழ் நிகண்டு, அகராதி, பாடல்கள் பல ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தது.

12-வது வயதில் அக்குழந்தையைப் பெற்றோர் தஞ்சைப் பின்லே உயர்பள்ளியில் 2-வது படிவத்தில் சேர்த்தனர். அங்குத் தமிழாசிரியராகப் பணியாற்றிய திரு. சேதுராம பாரதியாரிடம் ஆர்வமுடன் கற்றுத் தமிழ்ப் புலமையையும் அறிவையும் நம் மாணவர் நிறைய வளர்த்தனர்.

அதன்பின் தஞ்சையிலிருந்த பின்லே கல்லூரியிலேயே பழைய F. A., கற்றுத் தேர்ந்து சென்னைக்குச் சென்றார்; அங்குள்ள மாநிலக் கல்லூரியில் B. A., வகுப்பில் சேர்ந்து கற்றுவந்தனர். அது சமயம் நம் அய்யங்கார் அவர்கள், டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களின் மாணவராகவும் பேறு பெற்றனர். அத் தமிழ்த் தொடர்பு டாக்டர் ஐயரவர்கள் காலம் ஆகும் வரை

வளர்பிறைபோல் வளர்ந்து செழிப்படைந்தது. சென்னையிலிருந்த போதே வடமொழி, ஆங்கிலம் ஆகிய பிறமொழிகளிலும் நிறைந்த புலமை ஈட்டி பன்மொழிப் புலவராயினர்.

சென்னையில் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு 1913–ஆம் ஆண்டு அய்யங்கார் அவர்கள் மதுரைக்கு வந்தனர். அவர் செய்த நற்பேறு காரணமாக, அப்போது மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளராகவும், சிறந்த வழக்கறிஞராகவும் விளங்கிய டி. சி. சீனிவாச அய்யங்கார் அவர்களிடம் இளம் வழக்கறிஞராக (ஜூனியர்)ப் பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

அதன்பின் மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளராகப் பொறுப்பினை ஏற்று 30 ஆண்டுகள் வரை சிறந்த முறையில் தொண்டாற்றி வந்தார். அப்போது தமிழகத்திருந்த தமிழ்ப் புலவர் பெருமக்களைச் சந்தித்து அளவளாவித் தமிழ் அறிவை வளர்த்தும் நாடெங்கும் பரப்பியும் வந்தார்.

மதுரைக்கு வந்த சில காலத்திலேயே சிறந்த வழக்கறிஞர், உயர்ந்த பேச்சாளர், நல்ல தமிழ் மேதை என மக்களால் பாராட்டப் பெற்றார். அந்நாள் தொடங்கி 1955–ஆம் ஆண்டுவரை அன்னார் கலந்துகொள்ளாத மன்றங்கள், நூலகங்கள், படிப்பகங்கள் மதுரை மாவட்டத்தில் இல்லை எனலாம். தென்காசித் திருவள்ளுவர் கழகத்தைத் தொடங்கி வைத்தவர் அவரே, பன்னாள் அங்குச் சொற்பொழிவாற்றி யாவரையும் மகிழச் செய்தனர். மேலும் தேரழுந்தூர் கம்பர்மேட்டைச் செப்பனிட்டுச் சீர்திருத்தினர். அதனைச் சென்னை அரசாங்கம் எடுக்குமாறு செய்து, ஆண்டு தோறும் அங்குக் கம்பர் விழா நடத்த நிலையான ஏற்பாடும் அமைத்தார்.

பல ஆண்டுகள் மதுரை சமக்கிருத அகடெமியின் தலைவராக அவர் விளங்கினர். தமிழ் சமக்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் ஒத்த அன்பும் உயரிய புலமையும் அவருக்கு உண்டு. ஆயின் மற்ற மொழிகளினும் தமிழ் சற்றுத் தாழ்ந்தது என யாரேனும் எண்ணினால், உடனே தமிழின் மேன்மையையும் உயர்வையும் எடுத்து விளக்கி அவர்கள் உள்ளங்கொள்ளுமாறு செய்துவிடு

வார். 1946–ஆம் ஆண்டு காஞ்சிமா நகரில் சமக்கிருதப் பற்றும் புலமையும் படைத்தவரிடையே தமிழின் சிறப்பான தன்மை களைப் பற்றி 11-நாட்கள் வரை சொற்பெருக்காற்றினர். அவற்றை உளம் நிறையக் கேட்டறிந்த அப்பெரியோர்கள் அய்யங்கார் அவர் களின் தமிழ்ப் பற்றையும் தமிழின் மேன்மையையும் அறிந்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

அவருக்குத் தொழிலில் ஏராளமான வருவாய் வந்தது. தன் குடும்பத்திற்கும் தனக்கும் தேவை என்று அப்பணத்தைச் சேர்த்து வைத்தாரில்லை. ஏழை மாணவர்கட்கு அள்ளி அள்ளித் தந்தார்; தமிழ் வளர்ச்சிக்குச் செலவிட்டார். செல்வரையும், வறியோரையும் சமமாக மதித்தார். பெரியோராயினும், சிறியோ ராயினும் ஒத்து உரையாடினர். பண்டிதராயினும், பாமரராயி னும் அவருடன் ஒருநாள் உரையாடினல் போதும், தமிழ்ப்புல மையும் தெய்வ பக்தியும் நிறையக் கொள்வர்; ஒருநாள் உரை யாடல் பல்லாண்டுகளாக வளரும்.

சுருங்கக் கூறின் எல்லார்க்கும் அன்பராய்த் தமிழ்த் தொண்டராய், உலக மக்கட்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந் தார். அத்தகைய உயர்ந்த மாணிக்கமாய் ஒளிவிட்ட என். ஆர். கிருட்டினசாமி அய்யங்கார் அவர்கள் கடந்த 26—11—66–ஆம் நாளன்று இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## சங்கச் செய்திகள்

**முன்னாள் செயலாளர் மறைவு:**

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் என். ஆர். கிருட்டிணசாமி ஐயங்கார் பி. ஏ., பி. எல்., அவர்கள் 26-11-66-இல் இவ்வுலக வாழ்வை நீத்தமை குறித்துப் பெரிதும் வருந்துகின்றோம். அன்னார் இச்சங்கத்தின் செயலாளராக 30 ஆண்டுகள் இருந்து, ஆற்றிய பணிகள் அளப்பில. அவர்தம் மறைவுக்கறிகுறியாக இவ்விதழில் அவர்தம் புகைப்படமும், வாழ்க்கைக் குறிப்பும் தனியே வெளியிட்டுள்ளோம். அவர்தம் நல்லுயிர் எல்லாம் வல்ல இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்க வேண்டுவதுடன், அவருடைய குடும்பத்தினர்க்கும் எம் ஆழ்ந்த துயரத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றோம். (ஐயங்கார் அவர்களின் மறைவு குறித்துச் செந்தமிழ்க் கல்லூரிக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பெற்றது.)

**அனைத்துலகத் தமிழ் மாநாடு:**

கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மாநாட்டின்போது கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகம், பொருட்காட்சி ஒன்றை அமைத்திருந்தது. அப்போது நம் சங்கத்திலிருந்து 51க்கு மேற்பட்ட தமிழறிஞர்களின் உருவங்கள் தீட்டப்பெற்ற ஓவியங்கள் கொண்டுசெல்லப்பெற்று அங்கு வைக்கப்பெற்றன. தமிழ்நாடு முதலமைச்சர் கனம். எம். பக்தவத்சலம் அவர்கள் அவ்வோவியக் கண்காட்சியைத் திறந்து வைத்தனர். அப்போது

எடுக்கப்பெற்ற புகைப்படம் இவ்விதழின் மற்றொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு விழா:

இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு விழா, அண்மையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற இருக்கிறது. தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களைத் தலைமையாகக் கொண்ட நூற்றாண்டு விழாக் குழுவினர், இவ்விழாவை இராமநாதபுரத்தில், பலரும் போற்றும் வகையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளனர். எனவே அடுத்து வரும் நமது 'செந்தமிழ்' "பாண்டித்துரைத் தேவர் மலரா"க வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## புலவர் தேர்வு:

நம் சங்கம், தொடக்ககால முதற்கொண்டே தமிழ்ப்புலவர்களுக்கெனத் தனித் தமிழ்த்தேர்வுகள் நடாத்திப் பாலபண்டிதம், பண்டிதம் முதலான பட்டங்களை அளித்து வருவதை அனைவரும் நன்கறிவர். இப்போது அதே தேர்வுகளை வைத்து, வெற்றி பெறுவோர்க்கு முறையே இளம்புலவர், புலவர் என்னும் பட்டங்கள் வழங்கிவருகின்றோம். இப் 'புலவர்' பட்டம் பெறுவோரும், உயர் தொடக்கப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரிதற்குத் தகுதி பெற்றவராவர். இது குறித்துத் தமிழ்நாடு அரசு, ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. அதன் நகல் ஒன்று இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழா:

மதுரை நகர், மீனாட்சி திருக்கோவில் வடக்காடி வீதியின்கண் உள்ள 'மதுரைத் திருவள்ளுவர் கழகம்' கடந்த 25 ஆண்டுகளாகத் தமிழ்ப் பணி புரிந்துகொண்டு வருவதைத் தமிழகம் நன்கு அறியும். அதன் 'வெள்ளி விழா' வரும்

மே திங்களில் 5 நாட்கள், முத்தமிழ் விழாவாக, நடைபெற விருக்கிறது. அதனையொட்டி 'அனைத்துலகத் திருக்குறள் மாநாடு' ஒன்று நடாத்தவும் 'ஓவியக் கண் காட்சி' அமைக்கவும், 'வெள்ளி விழா மலர்' ஒன்று வெளியிடவும் முடிவுகள் செய்யப் பெற்றுள் ளன. திருக்குறள் தொடர்பான நாடகப் போட்டியும்' ஓவியப் போட்டியும் வைக்கப்பட்டுள்ளன. நாடகப் போட்டிக்கு ரூ 500/-ம் ஓவியப் போட்டிக்கு ரூ 300/-ம் பரிசுகள் வழங்கப்படும். மாநாட் டின் போது, திருவள்ளுவர் ஆண்டாகிய 2000ஐ 1969ல் உலகமெங் கும் பெருவிழாவாகக் கொண்டாடுதற்குரிய திட்டங்கள் வகுக்கப் படும். இவ் வெள்ளி விழாவும், மாநாடும் சிறப்புற நடக்கத் தமிழ்ப் பெருமக்களின் பேராதரவும், ஒத்துழைப்பும் தேவை யென வெள்ளிவிழாக் குழுவின் பொதுச் செயலாளர் திரு. கி. பழநியப்பன் அவர்கள் வேண்டிக்கொள்கின்றனர். இவை பற்றிய முழு விவரங்களுக்குப் "பொதுச்செயலர், வெள்ளி விழாக் குழு, மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்காடிவீதி, மதுரை-1" என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

## மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

# 1967 – பள்ளி - கல்லூரித் தேர்வுகள்.

—✻—

அன்புடையீர்,

பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டுத், தமிழ்ச் சங்கத் தேர்வுகளுக்கு, முன் அறிவித்த கால அட்டவணையில் சில மாறுதல்களை ஏற்படுத்துவது இன்றியமையாததாகின்றது.

1. உயர்பள்ளி, பயிற்சிப்பள்ளி நாட்களில் மாறுதல் இல்லை. 28—1—1967 அன்றே நடைபெறும்.

2. கல்லூரித் தேர்வுகள் 11—2—1967, 13—2—1967-க்குப் பதில் 4—2—1967, 6—2—1967-ல் நடைபெறும்.

3. தேர்வுக் கட்டணம் சங்கத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் உயர்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரி எல்லாவற்றிற்கும் 10—1—1967 ஆகும்.

தங்கள் ஒத்துழைப்பையும் பேராதரவையும் தருமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

கி. பழநியப்பன்,
செயலாளர்.

# Copy of the

Proceedings of the Director of Secondary Education, Madras-6.

R. C. No. 108301 B7/65. Dated: 5th May. 1966.

## GOVERNMENT OF MADRAS

Education and Public Health Department

G. O. Ms. No. 625 Education. Dt. 28th April, 1966

## ABSTRACT

Elementary Education-Pulavar (Panditham) Certificate issued by the Madurai Tamil Sangam-Declared equivalent to the Pandits' Examination held by the Tamil Sangam.

READ:

From the Director of Secondary Education,
Rc. No. 108301/P3/65 dt. 8—12—65.

From the Director of Secondary Education,
Rc. 108301B7/65 dated; 30—3—66.

ORDER:

The Government accept the recommendation of the Director of Secondary Education that the Pulavar (Panditham) certificate issued by the Madurai Tamil Sangam be considered equivalent to the Pandits' Examination Certificate mentioned in Rule 13 of the Madras Educational Rules for the purpose of appointment of Tamil Pandits in Higher Elementary Schools subject to the condition that the holders of Pulavar (Panditham) Certificate should not be confirmed in service unless they have successfully undergone the training course conducted by the Annamalai University.

The Director of Secondary Education is requested to submit necessary draft amendments to the Madras Educational rules in due course.

(By order of the Governor)

**J. AnjaniDayanand,**

(True copy) Deputy Secretary to Government.

(Copy) communicated.

2. These Pandits who are appointed in Higher Elementary Schools with reference to rules and orders in the matter are eligible for the minimum in the time scale of pay applicable to secondary grade teachers i. e. Rs. 90/- per mensem.

(Sd.) **S. V. Chittibabu,**

for Director of Secondary Education.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்



தோற்றம்:
21—3—1867.

மறைவு:
2—12—1911

அன்பளிப்பு

## முன்னுரை

முன்னர் அறிவித்தவாறு, இச் "செந்தமிழ்" பாண்டித் துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு விழா மலராக வெளிவருகின்றது. தேவரவர்கள், தமிழுக்குச் செய்த தொண்டுகளை நினைவுகூர்தற் பொருட்டு வெளிவரும் இம் மலர், பலர்க்கும் பயன்படும் என்று நம்புகின்றேன்.

"நான்காம் தமிழ்ச் சங்கம்" என நானிலம் புகழும் இம் "மதுரைத் தமிழ்ச் சங்கத்"தைத் தோற்றுவித்த பெருந்தகை, பாலவனத்தம் சமீன்தார் பொ. பாண்டித் துரைத் தேவரவர்கள் என்பதை அனைவரும் நன்கறிவர். அன்னவர்தம் நூற்றாண்டு விழாவை இம் மார்ச்சுத் திங்களில் சிறப்புறக் கொண்டாட முடிவு செய்யப்பெற்றிருந்தது. ஆனால், நாம் யாவரும் எதிர்பாரா வகையில், இத் தமிழ்ச்சங்கத்தின் தன்னிகரில்லாத் தலைவராய்த் திகழ்ந்தவரும், என் அன்புக்கு உரியராய் இலங்கியவருமான இராமநாதபுரத்தரசர், உயர்திரு. சண்முக இராசேசுவரசேதுபதியவர்கள், திடுமென இறைவன் திருவடி நீழல் எய்திவிட்டனர். இவர்கள் இழப்பு, நம் தமிழகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவர்களை இழந்து, துயருறும் மனைவி, மக்கட்கு, என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்

கொள்கின்றேன். அரசர் அவர்களின் நல்லுயிர், எல்லாம் வல்ல எம்பெருமான் திருவடி நீழலில் இரண்டறக் கலந்து இன்புறுவதாக என இறைஞ்சுகின்றேன்.

அரசர் அவர்களின் மறைவினால், பாண்டித்துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு விழாத் தேதியைத் தள்ளிவைத்துள்ளோம். அதுபற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பி.டி. ராஜன்.